1.
2113

# சிறு பிரபந்த வகைகள்



ஒற்றுமை ஆபீஸ்

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

# சிறு பிரபந்த வகைகள்

ஒற்றுமை ஆபீஸ்,
8, வியாசராவ் தெரு,
தியாகராயநகர், மதராஸ்-17.

[விலை ரூபா ஒன்று

# பொருளடக்கம்


1. குறம் : பக்கம்.
   டி. ஸ்குவார்ட்ஸ் ப்ளேக் பி.எ., பி.டி. .... 1—7
2. உலா :
   டி. அழகுவேலன், தமிழ்ப்பண்டிதர், பொன்னையா உயர்தரக் கலாசாலை, திருச்சி .... 8–15
3. கலம்பகம் :
   எம். சிங்காரம் பிள்ளை, தமிழ்ப் பண்டிதர், செயின்ட் ஜோஸப் உயர்தரக் கலாசாலை, திருச்சி .... 16-23
4. தூது :
   எம். கோவிந்தசுவாமித் தேவன், தமிழ்ப்பண்டிதர், ஹோலிக்ராஸ் கல்லூரி, திருச்சி.... 24-33
5. காதல் :
   டி. கே. குப்புசாமி ஆழ்வார், தமிழ்ப் பண்டிதர், செயின்ட் ஜோசப் உயர்தரக் கலாசாலை, திருச்சி .... 34-42
6. பள்ளு :
   எ. விஸ்வநாதன் பி.எ., பி.எல். திருச்சி .... 43-52
7. ஆற்றுப்படை :
   எஸ். சீதாராம ஐயர், தமிழ் ஆசிரியர், நாஷனல் கல்லூரி, திருச்சி .... 53-60
8. பரணி :
   பி. என். சுப்பராம சர்மா, தமிழ்ப் பண்டிதர், செயின்ட் ஜோசப் உயர்தரக் கலாசாலை. திருச்சி .... 61-69


---


Grateful acknowledgement is made to A. I. R. Trichinopoly for permission to publish the broadcast talks on 'Siruprabandha Vakaigal'; Proprietor Ottrumai Office, T'Nagar, Madras.

# சிறு பிரபந்த வகைகள்

## 1. குறம்

நமது தமிழ்மொழியிலே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நூற்கள் பல உண்டு. அவற்றுள் எளிய இனிய நடையில் அமைந்த நூற்களில் குறமும் ஒன்ருகும். இக்குறமாவது கலம்பகத்தினின்று பிறந்ததாக அறியப்படுகிறது. இது 96 வகைப் பிரபந்தங்களில் ஒன்ருகும். குறம் என்பது கலம்பகத்தின் ஓர் உறுப்பாகும். குறம் என்ற சில்லறைப் பிரபந்தம் முதலாவது குறம் என்ற கலம்பக உறுப்பாயும், குறத்திப் பாட்டு என்ற தனிப்பாட்டாயும் இருந்து பின்னர் குறம் என்ற வருணனை நூலாயும் குறவஞ்சி என்ற நாடக நூலாயும் விரிந்துவிட்டது.

குறவஞ்சி என்ருல் குறப்பெண். இது குறத்திப் பாட்டு எனவும் குறவஞ்சி நாடகம் எனவும் வழங்கும். குறத்திப்பாட்டு என்பதற்கு இலக்கணம் பன்னிரு பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலிய நூல்களில் தெளிவுறக்காணலாம். அவற்றுள் பன்னிருபாட்டியலில், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலமும் திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே என்பது சூத்திரம். பவனி வந்த தலைவனைக் கண்டு தலைவி மயங்கித் தன் நிலையைத்

தோழிக்குக் கூறுதல், குறத்தி வருதல், தலைவி குறத்தியை மலைவளம் வினுதல், குறத்தி மலைவளம் முதலியன கூறிப் பின்னர், குறி கூறிப் பரிசு பெறுதல், அவளைக் குறவன் தேடி வந்து காணுதல் முதலிய உறுப்புக்களைப் பெற்று, வெண்பா, அகவல், விருத்தம் முதலிய செய்யுட்களையும் கொண்டு, இடையிடையே சிந்து முதலிய நாடகத்தமிழாற் பாடுவது குறவஞ்சி எனப்படும். இஃது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் இறுதிப் பகுதியாகிய நாடகத்தின் பாற்படும்.

குறவஞ்சிகளில் பல உண்டு. அவையாவன— திருக்குற்றாலக் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, சரபேந்திர பூபால குறவஞ்சி, பெத்லகேம் குறவஞ்சி முதலியன.

திருக்குற்றாலக் குறவஞ்சியைப்பற்றிச் சற்று கவனிப்போம். நமது செந்தமிழ் நூல்களின் பெயர்களுக்கு முன்னும் இடப்பெயர்களுக்கு முன்னும் திரு என்ற அடைமொழி வழங்கி வருவதை நாம் அறிவோம். குற்றாலம் என்று சில இடங்கள் உண்டு. ஒன்று தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் அருகே உள்ளது, நாம் கவனிக்கும் குறவஞ்சி அதைப்பற்றியது அன்று. மற்றொன்று மிகப் பெயர் பெற்றது. அது பாண்டிய நாட்டில் உள்ளது. அங்குதான் சிறந்த நீர்வீழ்ச்சி இருக்கிறது. அஃது உடல் நலத்திற்கேற்ற இடம். மற்றும் சமயச்சிறப்பு வாய்ந்தது சிவனடியார்களுக்குச் சிறந்த இடம். இது பல நாயன்மார்களால் புகழ்ந்து பாடப்பட்டுள்ள ஊராகும். திருக்குற்றாலக் குறவஞ்சியாகிய இந்நூல் குற்றால மலையில் வீற்றிருக்கும் இறைவனைப் பற்றியதாகும். இந்நூலாசிரியர் பெயர் திரிகூட

ராசப்ப கவிராயர்; இவரது ஊர் மேலகரம் என்பதாகும். இவருக்கு மதுரை சொக்கலிங்க நாயக்கர் இந்நூலின் சிறப்பு நோக்கி "குறவஞ்சிமேடு" என்ற நன்செய் நிலத்தை வழங்கியதாக ஒரு வரலாறு உண்டு. இந்நூல் சொல்வளம் பொருள் வளம் செறிந்து உள்ளது. இவர் இயற்றிய நூல்கள் குற்றாலத் தல புராணம், கோவை உலா, பிள்ளைத் தமிழ் முதலியன. இத்தகைய குறவஞ்சிகள் பொது மக்கள் மனதை மிக்வும் கவர்வன. தமிழ்ப் பாடல்கள் புலவருக்கு மட்டும்தான் உதவும் என்ற போலிக்கருத்தை இப்பாடல்கள் பொய்ப்பிக்கின்றன. திரிகூட மலைவளத்தை மிக எளிய நடையில் புலவர் பின்வருமாறு பாடுகிறார்.

'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரையழைப்பார்
கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பார்
தேனருவி திசை எழும்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்
கூனல் இளம் பிறை முடித்தவேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலை எங்கள் மலையே.'

மற்றும் குற்றால மலைவளத்தைப்பற்றி அறிஞர் பெருமான் அழகுபடக் கூறியிருப்பது பொது மக்களாலும் புலவர்களாலும் இன்புற்றுச் சுவைக்கத் தக்கது.

மலையிலிருந்து பேரொலியுடன் விழும் நீர் அருவியானது கழற்சிக்காயை ஆடுவதுபோல முத்துக்களை வீசி யெறியும். அன்றியும் முற்றங்களில் சென்று பரவிப் பெண்கள் விளையாட்டாகக் கட்டிய சிறு இல்

லங்களை அடித்துக்கொண்டு செல்லும். மலையில் வாழும் மக்கள் கிழங்குகளைத் தோண்டித் தேனெடுத்து மலை வளம் பாடி ஆடுவார்கள். யானைகளின் அணிகலன் அணிந்த தந்தங்களினால் தினையரிசி குத்துவார்கள், குரங்குகள் தேமாவின் பழங்களைப் பந்துபோல் விளையாடும். நறுமணம் கமழும் சண்பகப் பூக்கள் விண்ணுலகம் சென்று பூக்கும். நாகரெத்தினம் புதிய வெயிலை வீசும் வானில் செல்லும் திங்களை யானைகள் மலை மீது இருந்தவண்ணம் வழி மறிக்கும். தினைப்புனங்கள் தோறும் வெட்டப்படும் மரங்கள் நறுமணத்தை நல்கும். மலையில் வரையாடுகள் அங்கு மிங்கும் துள்ளிக் குதித்து விளையாடும். மலை வானளாவி உயர்ந்து காகங்களையும் பறந்து செல்லாது தடுக்கும்; இத்தகைய பல வளங்கள் செறிந்த மலையில் சிறந்த பலா மரத்தின் கீழ்ச் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளாரென்று புலவர் வருணிக்கிறார்.

இரண்டாவதாகத் தலைவனை விரும்பிய தலைவி காதல் நோய்ப்பட்டு மன்மதனையும் சந்திரன், தென்றல், குயில் முதலியவற்றையும் இழிவுபடக் கூறிப் புலம்புவதைத் திருவாரூர்க் குறவஞ்சியில் காணலாம். பின்னும் தலைவியின் உயிர்ப் பாங்கி வருதலும், அவளைத் தூது விடுத்தலும் அப்போது குறத்தி வருதலும் அவளுடைய இயல்பும் குறத்தியின் வருகையை தோழி தலைவியினிடம் கூறலும் தலைவி குறத்தியை அழைப்பித்தலும் இன்ன பிறவும் காணப்படும்,

இப்போது கூறப்படும் பகுதி குமர குருபரர் இயற்றிய மதுரை மீனாட்சி குறமாகும். மீனாட்சி யம்மையார் இங்கே பாட்டுடைத் தலைவி. சொக்கலிங்கப் பெருமான் பால் காதல் கொண்ட ஒரு தலைவியின் கையைப் பார்த்துக் குறத்தி குறி சொல்லுவதாக இக்குறம் அமைந்துள்ளது.

'முன்னொருநாள் அம்மை தடாதகை பிறந்த நாளின்
முகக்குறிகண்டு இவள் உலகமுழுதும் ஆளும் என்றேன்
பின்னொரு நாள் கைக்குறிபார்த்து அம்மை உனக்கு எங்கள்
பிஞ்ஞகர் தாம் மணவாளப் பிள்ளையென்று சொன்னேன்
அன்னை அவள் மெய்க்குறிகள் அனைத்தையும் பார்த்து உனக்கோர்
ஆண்பிள்ளை உண்டு பிறந்து அரசாளும் என்றேன்
சொன்ன குறியெல்லாம் என்சொற்படியே பலிக்கும்
தொகுத்து நீ நினைத்த குறி இனி சொலக்கேள் அம்மே.'

[பிஞ்ஞகர் - சிவன். தடாதகை - பார்வதி]

மலையின்கண் நிகழும் நிகழ்ச்சிகளைக் குறத்தி கூறுவதுபோல் புலவர் அழகாகப் பாடுகிறார்.

'சிங்கமும் வெங்களிறும் உடன்விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடும் அங்கொருபால்
வெம்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும் இருந்து அயருமொருபால்
அம்கன் அமர் நிலம் கவிக்கும் வெண் கவிகை நிழல்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வில்லி
செங்கமலப்பதம் பரவும் கும்பமுனிபயிலும்
தென் பொதிய மலைகாண் மற்று எங்கள் மலையம்மே.'

மூன்றாவதாகக் குறவருடைய தொழிலைக் காட்டும் பகுதி மிக இனிமையாயிருக்கிறது.

'கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்கிழங்கு கல்லி யெடுப்போம்
குறிஞ்சி மலர் தெரிந்து முல்லைக்கொடியில் வைத்துத் தொடுப்போம்
பழம் பிழிந்த கொழுஞ்சாறும் தேறலும் வாய்மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக்கொடுப்போம்
சினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்
எழுந்து கயற்கணிகாலில் விழுந்து வினைகெடுப்போம்
எங்கள் குறக்குடிக்கடுத்த இயல்பு இதுகாண் அம்மே.'

நாலாவது சரபேந்திர பூபால குறவஞ்சி. தஞ்சா ஊரில் ஆண்ட சரபோஜி மன்னன்மீது பாடியது. இது தஞ்சை பெரிய கோவிலில் ஆண்டுதோறும் திருவிழாக் காலத்தில் ஆடப்பட்டு வருகிறதென்று தெரிகிறது. பின்வரும் பகுதி நகைச் சுவை ததும்பி உள்ளது. ஒரு குறத்தி தெலுங்குப் பெண், மராட்டியப் பெண், கன்னடப் பெண், துலுக்கப்பெண், ஆங்கிலப்பெண் முதலியோரிடம் குறி பார்க்கப் போகிருள். அவர்கள் ஒவ்வொருவரும் "என் கையைப் பார்" என்று அவரவர் தாய் மொழியில் கூறுவதுபோல் புலவர் பாடுவது வேடிக்கையாய் இருக்கிறது.

தெலுங்குப் பெண் கூறுவது:—

நண்ணிடங் கொரு தெலுங்கமானினி
நா செய் சூடு எனச்சொன்னுள்
நாடி நற்குறி ஓதினேன் இந்த நாசிகாபரணம் ஈந்தாள்

மராட்டிப் பெண் கூறுவது:—

'வண்ண மாரொருமராட மாது மஜ
ஹாத் பஹ ஆக என்ருள்
மற்ற வட்கு இசை கைக்குறிக்கு அவள்
வச்சிரத் தொடி தந்தாள்

கன்னடப் பெண் கூறுவது:—

'கண்ணியிங் கொரு கன்னடப்பெண் நன
கையின நோடே என்ருள்
கருதவட்கு இசை குறிதனக்கவள்
காதினே லோபளித்தாள்.

துலுக்கப் பெண் கூறுவது:—

'அண்ணலங்கொளோர் துலுக்க வஞ்சி மை
ஹாத் தேக்கர் போலாங் என்ருள்
அன்ன கைக்குறி சொன்னதற்கவள்
மின்னிடு ஆரம் அளித்தாள்.

ஆங்கிலப் பெண் கூறுவது:—

'ஒண்ணுதல் பெறு இங்கிலீஷ் மா
    தொருத்தி லுக் மை ஹாண்டென்றாள்
ஓதினேனவள் பாணிரேகை கண்
    டுதவினால் இந்த மேகலை.

பின்வருவது குளுவன் சிங்கனிடம் கூறுவது. இப்பகுதி அவன் இயல்பாகப் பேசுவதைத் தெளிவாய்க் காட்டுகிறது.

'காவென்றும் கீயென்றும் குக்கூவென்றும்
    ககவென்றும் கிகியென்றும் கக்கோவென்றும்
கூவிக்கொண்டிருந்த எல்லாம் சும்மா இங்கே
    குந்தியிரு நாங்கள் போய்வருவோமென்று
போவது பாருனை நாப்புக்காட்டி நீயிப்
    போது பக்கிப் பிடித்த தினிப்போது உன்தன்
ஆவியன்ன சிங்கிதனைத் தேடு சிங்கா
    அண்ணல் சரபோஜி தஞ்சை யணுகித்தானே.'

கடைசியாகப் பறவை கண்ணியில் சிக்கி விழிப்பதைச் சிறந்த புலவரிடம் போலிப் புலவர்கள் அகப்பட்டுத் திண்டாடுவதற்கு ஒப்பிடுவது பாராட்டத் தக்கது.

'செந்தமிழ் இலக்கணம் தெரியார் கவி சொல்லிச்
சேரும் அதன் குற்றம் தெரிந்தோர் வினவுங்கால்
சிந்தை மயங்கி விழித்தல்போல் கண்ணியில்
சிக்கிக் கொண்டிங்கொரு பக்கி விழிக்குது'

என்பதாகும்.

பெத்லகேம் குறவஞ்சியை இயற்றியவர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாராவர். பெத்லகேம் குறவஞ்சி என்றால் பெத்ல கேமில் பிறந்த தீர்க்க தரிசனத்தின் பெண் என்று பொருள்படும். சொல்லப்புகின் பெருகும்.

குறவஞ்சி நாடகத்தைச் சேர்ந்த நூலாதலால் சில கருத்துக்களை நாடகத்தின் மூலம் மனதில் பசு மரத்தில் அறைந்த ஆணிபோல் பதியச் செய்ய உதவி புரிகின்றது. இது கற்ருராலும் கல்லாதாராலும் சுவைக்கத் தக்கது.

---

## 2. உலா

தமிழ்நாட்டைச் சேர சோழ பாண்டிய மன்னர்கள் முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்து ஆட்சி புரிந்து வந்தனர். இவர்கள் வரலாற்றை அவ்வக்காலத்திலிருந்த புலவர்கள் இலக்கிய வடிவாகத் தந்துள்ளனர்.

சோழர்களில் பரணி என்னும் நூலுக்குப் பாத்திரமான மன்னன் முதற் குலோத்துங்க சோழன். அவ்வரசன் தமிழையும் புலவர்களையும் போற்றி வந்தான். அவனுல் ஆதரிக்கப்பட்ட சிறந்த புலவர்கள் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், ஔவையார் என்பவர்களாம். இப்புலவர்களில் சமஸ்தான வித்துவானுகவும் ஆசிரியராகவும் இருந்தவர் ஒட்டக்கூத்தர் என்னும் வரகவியே யாவர். 'கடவுட்புலவன்' 'கவிச் சக்கரவர்த்தி' என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றவர். உலா என்னும் பிரபந்தம் பாடுவதிற் சிறந்தவர். 'கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்' என்று ஆன்ருேர் புகழும் பெரும்புலமை படைத்தவர். அவர் தம் காலத்தில் வாழ்ந்த சிறந்த சோழ மன்னர் மூவர் சிறப்பையும், அவர்கள் முன்னேரின் வரலாறுகளையும் உலா என்னும் பிரபந்த வகையால் விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழில் தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்கள் உண்டு. அவற்றுள் உலா என்பதும் ஒன்று. பிரபந்தமென்பது புலவன் தான் வழிபடுகின்றதெய்வத்தையோ, அடியாரையோ தனக்கு உபகாரஞ் செய்த வள்ளலையோ புகழ்ந்து பாடுகின்ற நூல். பாட்டுக்குரிய தலைவன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடுதலின் இஃது இப்பெயர் பெற்றது. உலா வருதலைப் பவனி வருதல் என்றுங் கூறுவர். இது கலிவெண்பா என்னும் பாட்டு வகையால் பாடப்பெறும். தலைவன் வீதியில் பவனி வருகையில் அவ்வீதியிலுள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழு பருவப் பொது மகளிரும் அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடப்படுவது.

காப்பியங்களில் அவற்றின் தலைவர்கள் தத்தமக்குரிய வாகனங்களின் மீது ஏறி உலா வரும் காட்சிகளைப் புனைந்து அமைத்தல் கவி மரபு. முடிபுனைந்தும், மணம் புரிந்தும், வெற்றிபெற்றும் உலாவருதல் உண்டு. முடிபுனைந்து உலா வந்ததை உதயணன் வரலாற்றைக் கூறும் பெருங்கதையால் உணரலாம். மணம் புரிந்து உலா வந்ததைச் சீவகனைப் பாட்டுடைத் தலைவனகப் பெற்ற சீவக சிந்தாமணியிற் காணலாம். வெற்றி பெற்று உலா வந்ததை,

பேதைமார் முதல் கடைப் பேரிளம் பெண்கள்தாம்
ஏதியார் மாரவேள் ஏவவந்து எய்தினர்
ஆதிவானவர் பிரான் அணுகலால் அணிகொள்கார்
ஓதியார் வீதிவாய் உற்றவான் உரை செய்வாம்.

[ஏதி- ஆயுதப்பொது-வேள்-மன்மதன். ஓதி-அன்னம்]
எனக் கம்பர் இராமாயணத்தில் இயம்பியுள்ளார். இதனை 'உலா வியற்படலம்' என்றே அமைத்துள்ளார். இவ்வாறு தலைவர் உலா வருவதாகக் காப்பியங்களில் சுருக்கமாக அமைக்கப்படும் செய்தியையே தமக்குரிய பொருளாகக் கொண்டு விரிவுபெற அமைத்த பிரபந்தமே உலாவாகும்.]

உலா அரசர்கள் மீது பாடப்பெறும் பாட்டு என்பதற்கு ஒட்டக்கூத்தர் பாடிய 'மூவருலா' ஓர் எடுத்துக் காட்டாகும். மூவருலா சோழரின் வரலாற்று நூலெனலாம். சோழ அரசர்களாகிய விக்கிரமன், இரண்டாங் குலோத்துங்கன் இராசராசன் என்னும் மூவரைத் தனித் தனி தலைவராகக் கொண்டு பாடிய உலாக்கள் மூன்றும் 'மூவருலா' என வழங்கப் பெறுவன. இம் மூவரும் கலிங்கத்துப் பரணி என்னும் நூலின் பாட்டுடைத் தலைவனாகிய முதற் குலோத்துங்கன் வழித் தோன்றலாவர். இவ்வுலாவினால் ஐம்பதிற்கு மேற்பட்ட சோழர்களின் அருஞ் செயல்களையும் மேம்பாட்டையும் அறியலாம்.

முதற் குலோத்துங்கன் மகனாகிய விக்கிரம சோழன் இளையவனாக இருக்குங்காலத்தில் கருணாகரத் தொண்டைமான் என்னும் சேனைத் தலைவருடன் கலிங்கப் போருக்குச் சென்றான். பகைவரை வென்று வாகை சூடினான். மேலைக்கடலைத் தனக்கு உரிமையாகக் கொண்டான். வடகன்னடம், தென்கன்னடம் ஆகிய நாட்டைத் தன்னடிப்படுத்தினான். பெரிய ராஷ்டிர கூட மன்னனைக் கொன்று வென்றான். இமயமலையை வடக்கு எல்லையாகப் பெற்றான். இவன் காலத்தில் மூன்று முரசுகள் இருந்தன. அவை வீரமுரசு, நியாயமுரசு

தியாக முரசு எனப்படும். முரசங்களுக்கும் போருக்கு உரிய பூவைச் சூடுதல் மரபு. மண முரசும் இருந்தது.

விக்கிரம சோழன் மகன் இரண்டாங் குலோத் துங்கசோழன். சைவத்திற் பற்றுடையவன். சிதம்பரத் திலும், காஞ்சீபுரத்திலும் பல அரும் பணிகள் ஆற்றி யுள்ளான். சேக்கிழார் பெருமானைக்கொண்டு பெரிய புராணம் பாடச் செய்தவனும் இவனே. கம்பரைப் பிற் காலத்தில் ஆதரித்தவனுவான். இவன் மகன் இரண் டாம் இராஜ ராஜன் என்பவன். இம்மன்னனும் சைவத் திற் பற்றுடையவன். சிதம்பரக் கோவிலில் சிற்றம்பலம் பேரம்பலம் என்ற சபையை அமைத்தான். பல மண்ட பங்களைக் கட்டினன். சுற்றுமதில் எழுப்பினன். சிவ காமியம்மன் கோவிலையும், திருச்சுற்றுமாளிகையையும் ஏற்படுத்தினன். பொன்னும் வேய்ந்தான். இவ்வாருகக் கோவிலுக்குப் புரிந்த பெருந்தொண்டுகள் பல.

இம்மூவரும் கி. பி. 1118 முதல் 1180 வரை ஆண் டனர். இவர்கள் தலைநகரம் கங்கைகொண்ட சோழ புரம். இவர்கள் முன்னோரின் அருஞ் செயல்களில் இரண்டொன்றைக் கேட்போம்.

**சுரகுரு என்ற சோழன்** காலத்தில் வயது சென்று உணவு அருந்தாமல் உயிருடனிருந்த மக்களை சாடியில் வைத்து நிலத்திற் புதைத்து விடும் பழக்கம் இருந்திருக் கின்றது. 'ஓடி மறலி ஒளிப்ப **முதுமக்கட்சாடி** வகுத்த தராபதியும்' என விக்கிரம சோழனுலா நினைவூட்டும்.

'கொள்ளுங் குடகுக் குவடேறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும் என்னும்

ஒட்டக்கூத்தர் வாக்கு **சிவகன் என்னுஞ் சோழன்** குடகு மலையைக் குடைந்தெடுத்து,காவிரிகால் பலகொண்டு எழு கடலொடுங் கலக்கச் செய்த அரும் பணியை அறிவிப்ப தாகும்.

மேருமலையிலும் இமயமலையிலும் புலிக்கொடி பொறித்துக் காவிரிக்குக் கரையெடுத்தவன் கரிகாலனு வான். இராஜராஜ தேவன் என்னும் சோழன் பகை வருடன் போர்செய்து முகத்திலும் மார்பிலுமாகத் தொண்ணூற்ருறு புண்களைப் பெற்று வெற்றியுடன் வீரவிளக்காய்த் திகழ்ந்தான். முதலாம் பராந்தகன் என்னுஞ் சோழன் சிதம்பரத்தின் நடராஜர் எழுந்தருளி யுள்ள சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான். இராஜ மகேந்திரன் என்ற மன்னன் சீரங்க நாதருக்கு சேஷ சயனம் அமைத்தளித்தான். இவ்வாறு பல அருஞ் செயல்களைப் புரிந்த சோழர்களின் வரலாறுகளையும், முன்னேரின் கீர்த்தியையும் ஒட்டக்கூத்தர் இயற்றி யுள்ள மூவருலாவால் நாம் நன்கு அறியலாம்.

தமிழில் முதன் முதல் தோன்றியதும், கடவுள் மீது பாடப்பெற்றதும் ஆகிய நூல் திருக்கயிலாய ஞான உலா என்பதாகும். இந்நூல் சேரமான் பெருமாள் நாய ஞர் என்னுஞ் சைவப் பெரியாரால் பாடப்பட்டது. தமிழ் மொழியிலேயே முதன் முதல் தோன்றிய உலா ஆதலினுலே 'ஆதியுலா' எனப்பட்டது. ஞான வாக்கினை யுடைய நாயனுரால் அருளிச் செய்யப்பட்டமையின் 'ஞான உலா' என்றும், திருக்கயிலாயத்தில் அரங்கேற் றஞ் செய்யப்பட்டமையின் தெய்வீக உலாவென்றும் இப்பிரபந்தத்திற்குப் பெயரமைந்தது.

உயிர்களெல்லாம் பெண்மையன. மூலப்பரம் பொருள் ஒருவனே ஆண்மையன், அப் பரமனைக் கண்ட உயிர்களெல்லாம் அவனிற் கலக்க அங்கலாய்க் குஞ் செய்தியே இவ்வுலாவின் உட்பொருளாகப் பாடப் பெற்றுள்ளது. ஆன்மாக்களெல்லாம் பெண்மையெனக் கொண்டு பார்க்கும்பொழுது சேரமான் பெருமாள் நாயனாரே எழுவகைப் பருவமாதராக இருந்து மாறி மாறி நடிக்கும் மனக்காட்சியே இந்நூலாக உருக்கொண் டது எனத் தூய உணர்ச்சி மிக்கார் ஓதுவர்.

'வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளியமால் விடையை மேற்கொண்டு என்னும்

அடிகள் பக்குவம் நிறைந்த அடியார்களின் உளத்தை உருகச் செய்வதாகும்.

மடந்தையைக் கூறும்பொழுது 'தீந்தமிழின் தெய்வ வடிவாள்' என்கின்றார்....இதனால் சேரமான் பெருமா ளுயனாரின் தெய்வப்பற்றுடன் மிளிருந் தமிழ்ப் பற்றும், அதனோடு கலந்த சைவப்பற்றும் அறியலாம்.

திருவானைக்கா உலா என்பது சோழநாட்டின் காவிரி நதிக்கரையில் அமைந்த ஆனைக்கா என்ற ஸ்த லத்தில் கோவில்கொண்டுள்ள வெண்ணாவலீசரின்மீது காளமேகப்புலவர் பாடியது. இவ்வுலாவால் வெண்ணா வலீசரின் மகிமையும், அகிலாண்ட நாயகியாரின் அரு ளையும் அறியலாம். சங்கு, குழல், முரசு, வங்கியம், மத் தளம், பேரிகை, முழவு, யாழ், எக்காளம் என்னும் பெயரமைந்த இசைக்கருவிகள் இருந்தமை காண லாம். சிலந்தியொன்று இறைவனுக்குத் தொண்டாற் றிக் கோச்செங்கட் சோழனாய் அவதரித்தமை அறி யக்கிடக்கின்றது.

திருவானைக்கா ஒரு சிவஸ்தலம். சோழநாட்டில் காவிரி கொள்ளிடம் என்னும் இரண்டாறுகளுக்கும் இடையே உள்ளது. ஆனை பூசித்தமையால் ஆனைக்கா என்று பெயர் பெற்றது. மூலலிங்கத்தைச் சுற்றி நீர் இடைவிடாது ஊறிக்கொண்டே இருக்கின்றது. இத் தலம் அப்புஸ்தலம்—காளமேகம் தமிழ்க்கடலை மாந்தி உலாவெனும் நீர்ப்பெருக்காக ஆக்கி அளித்துள்ளதைப் பருகிப் பருகித்துய்ப்போமாக.

**மதுரைச் சொக்கநாதருலா** :—சொக்கநாதரின் 64 திருவிளையாடல்களையும் அழகாக அமைத்துப் பாடப் பெற்றுள்ளது. 400 வருஷத்திற்கு முன்னர் பாடப்பெற்றது. அக்காலத்து அரசன் வீரமாறன் வேண்டுகோளினால் புராணத் திருமலைநாதர் பாடியது. சுவாமி பெயர் சொக்கநாதர் - அம்பிகை நாமம் - அங்கயற்கண்ணம்மை. ஆலயம்-திருவாலவாயென்பது. திருநீறணிந்த தொண்டர் ஒளிக்குப் பாற்கடலை உவமையாகக் கூறியுள்ளார்.

**திருக்கழுக்குன்றத்து உலா** :—என்பது அந்தகக்கவி வீரராகவ முதலியாரால் இயற்றப்பட்டது. இப்புலவர்க்குப் புறக்கண் இல்லையாயினும் அகக்கண் பெற்று அறிவு ஒளி வீசுவதை இந்நூலைக் கற்பதால் காணலாம். திருக்கழுக்குன்றம் எத்தகைய நோயும் தணிவதற்கு ஏற்ற இயற்கை நிலவளம் படைத்த ஓர் திருப்பதியாகும். இத்தலத்தில் இரண்டு கழுகுகள் வழிபடுவதை உவமையோடு கூட்டி

'பொன்மலையொன்றை யிருவெள்ளிமலை போற்றலெனத்
தன்மலைச் சம்பாதித் தவர்போற்ற' என்று கூறியுள்ளார்.

பொன் மலை - சிவபெருமான். வெள்ளி - கழுகுகள்

**தேவையுலா** என்பது இராமேசுரத்துத் திருக்கோயில்

கொண்டு எழுந்தருளியுள்ள இராமர்மீது இயற்றப் பட்டது. தேவை - இராமேசுவரம். 'அவனன்றி ஓர ணுவும் அசையாது' என்பனபோன்ற எளிய உலக வழக்குகளெல்லாம் இந்நூலில் காணலாம். 'அவனசை யாமல் அணுவசையாமை பவனனு மாருதியும் பார்த் தோன்' என்பதால் விளங்கும்.

**திருக்காளத்தி நாதருலா** :-திருக்காளத்தியில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது **சேறைக் கவிராசப் பிள்ளை** என்னும் கவிஞர் இயற்றியது. இறை வன்-சீகாளத்திநாதர். சிலந்தி, காளனென்னும் பாம்பு, யானை என்னும் இம்மூன்றுலும் வழிபடப்பட்டவரென் பது இதன் பொருள். அம்பிகை - ஞானப்பூங்கோதை யார். இத்தலம் ஆற்றூர் வளநாட்டில் அமைந்துள்ளது என்பர். கண்ணப்பர் கதிபெற்ற இடம் இதுவே.

திருப்பூவனநாதருலா - இது திருப்பூவனத்தில் கோவில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் மீது கவிஞர் பெருமாளுகிய திருப்பூவனம் கந்தசாமிப் புலவர் பாடியது. திருப்பூவனம்-பாண்டிய நாட்டிலுள்ளது. **சுவாமி**-புஷ்பவனநாதர். அம்பிகை-சுந்தரநாயகி. இவர் நூலில் சொல்லின்பம் ஜொலிக்கக் காணலாம்.

'ஆவிமுடித்திளைஞர் ஆவிமுடிக்கவெனச்
சீவி முடித்த திருக்குழலாள்-என்பனபோன்று வரும்.

எனவே-உலாவென்னும் பிரபந்தவகையால் முன்னோர் வரலாறுகளும் பல புலவர்களின் அறிவியல் நிலைகளையும் மாதர்தம் இயற்கை மனப்பான்மையையும் எழிலையும் இலக்கியத்திற் கண்டு அனுபவிக்கலாம்.

# 3. கலம்பகம்

கலம்பகம் என்பது பலவகை மலர்களால் தொடுக்கப்பட்ட பூமாலை போலப் பலவகைப் பாக்களால் தொடுக்கப்பட்ட மாலையாகும்.

இது தமிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பான், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களை யுடையது. வெண்பா முதலிய பாக்களும் பாவினங்களும் விரவ, செய்யுட்கள் அந்தாதித் தொடையால் அமைந்திருக்கும். இப்பதினெட்டு உறுப்புக்களுடன் பிற்காலத்தார், கொற்றியார், பிச்சியார், மதங்கியார் முதலிய உறுப்புக்களையும் கூட்டிக் கூறுவர்.

நந்திக்கலம்பகம் என்பது நந்தி வர்மனைப்பற்றிய கலம்பகம். இப்பொழுதுள்ள கலம்பகங்களில் காலத்தால் முற்பட்டது நந்திக்கலம்பகமே. இதனை இயற்றியவர் இன்னார் என்பது தெரியவில்லை. ஆயினும் இந்நந்திவர்மனின் தம்பியர்களில் ஒருவனே இக்கலம்பகத்தைப் பாடியவன் என்பர்.

இந்நந்திவர்மன் மூன்றாம் நந்தி வர்மபல்லவன். இவன் தந்திபோத்தரையன் மகன், தொண்டைநாட்டை அரசு புரிந்தவன், வந்தவாசியை அடுத்துள்ள தெள்ளாறு என்னும் போர்க்களத்தில் வரகுண பாண்டியனை வென்று 'தெள்ளாறெறிந்த நந்தி' என்று சிறப்புப் பெயர் பெற்றவன். இவன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர்.

இந்நந்தி வர்மன் சிறந்த போர்வீரன், உயர்ந்த கொடையாளி, கவித்திறம் வாய்ந்தவன், கலாவிநோதன், இவன் தமிழ் நாட்டில் மூவேந்தரோடு பொருது வெற்றி பெற்றதாகவும், இவன் தம்பிமார்களே ஒரு சமயம் சிறந்த பலவீரர்களைக் கொண்டு இவனோடு போர் புரிந்து தோற்றதாகவும் கூறப்படுகிறது. இதனை,

'தம்பியரெண்ணமெல்லாம் பழுதாக வென்றதலைமானவர துவசன்
செம்பியர் தென்னர் சேரர் எதிர்வந்து மாயசெருவென்ற பாரி'

என்று நந்திக்கலம்பகத்தில் வரும் அடிகளினால் போர் புரிவதில் சிறந்தவீரன் என்பதும், இவனைப்பாரி என்று உருவகப்படுத்தி இருப்பதால் பாரியைப்போலச் சிறந்த கொடையாளி என்பதும் விளங்குகிறது.

இனி கலம்பகத்தைப் பார்ப்போம் —காதலனைக் கண்டுகளிக்க எத்தனையோ தடவை தலைவி சோலைக்குச் செல்கின்றாள், சோலையின் நடுவில் வெள்ளிக்குடத்திலிருந்து பால் சொரிவது போன்ற தண்ணிலாவின் இன்பத்தை இருவரும் நன்கு அனுபவித்து வருகிறார்கள். அஞ்ஞான்று தலைவன், தலைவியை நோக்கி உன் பிரகாசம் பொருந்திய முகத்தின் அழகோடு இக்களங்கமுள்ள வெண்ணிலா போட்டிபோட முடியாது, என்று தலைவியைப் புகழ்ந்து கூறும் நிமித்தம் சந்திரனை இகழ்ந்துரைக்கின்றான்.

தலைவி, காதலனைப் பிரிந்து நிற்கின்றாள் நம் தலைவனைப் பிரிந்திருப்பினும் அவனோடு உல்லாசமாக விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்குச் சென்றாவது ஆறுதல் பெறலாமென்று வருகின்றாள். ஆனால், அன்று இன்பம் ஊட்டிய அதே வெண்ணிலா இன்று, தலைவியிடம் பழிவாங்க எண்ணுகிறது. தலைவி வெண்ணிலாவை நோக்கி, ஏ வெண்ணிலாவே, பெண் என்றால் பேயும்

இரங்குமே. உனக்கு இரக்கமென்பதே கிடையாதோ? உன் இஷ்டப்போல் வருத்தலாம் என்று எண்ணு கிருயோ? கேள்வி முறை கிடையாதுபோலிருக்கிறதே என்று கூற, தலைவியிடமிருந்து தானும் வேகமாகப் பிரிந்து செல்வதுபோல வெண்ணிலா செல்கின்றது. அதைக்கண்ட தலைவி,

'மண்ணெலாமுய்ய மழைபோல் வழங்குகரத்
தண்ணுலா மாறுத் தமிழ்நந்தி நன்ணுட்டில்
பெண்ணிலா வூரிற் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வே இந்த வேகம் உனக்காகாதே.

என்று வெண்ணிலாவைப் பார்த்துச் சொல்கிருள். இச் செய்யுளின் முன் இரண்டடியில் நந்தி தமிழை ஆதரித் தமை நன்கு விளங்குகிறது.

நந்தி அழகு மிகுந்த அரசன். அவன் அழகில் ஒரு பெண் ஈடுபட்டுக் காதல் கொள்கிருள். அவனைத் தழுவ விரும்புகிருள், அதனுல் காதல் நோய் மிகுந்து வெப்ப நோய் அடைகிருள், அதனை அறிந்த தோழி அவள் நோயைத் தணிக்கக் குளிர்ந்த சந்தனத்தைப் பூசுகிருள், அச்சந்தனமும் அவளுக்கு வெப்பத்தை அளிக்கின்றது. அப்போது அவள் இக்குளிர்ந்த சந்தனத்தில் யாரோ வெப்பத்தைக் கலந்து விட்டார்களே என்னும் பொருள் படத் தலைவி இரங்கிக்கூறும் பாடலைப் பார்ப்போம்.

"செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென்ருரோ தடவிஞர்-பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்."

இவ்வினியபாடல் நள்ளிரவில் நகர்சோதனை செய்ய வந்த நந்தியின் காதில் விழுந்தது. அப்படியே பரவசப்

பட்டு நின்றுவிட்டான். பாட்டின் பொருளை நினைக்குந் தோறும் வியப்பு அதிகமாயிற்று. அதுவும் தன்னைப் பற்றி இந்நள்ளிரவில் பாடுபவள் யார் என்று எண்ணினன். அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், அமிர்தம் போன்ற பாடலைமாத்திரம் மறக்க முடியவில்லை. இத்தகைய தமிழார்வமும் தமிழ்ப் பெருமையும் நன்கு நிறைந்த நந்தியை வீரத்தினாலும் வஞ்சனையாலும் கொல்ல முடியாத அவன் தம்பிமார் வசை பாடிக் கொல்ல நினைத்து, இந்நூலைப் பாடி முடித்து, இதிலுள்ள ஒரு செய்யுளை நந்தி ஊர்வலம் வரும்பொழுது அவன் காதில் விழும்படி ஒரு தாசியைக்கொண்டு இசையுடன் பாடச் செய்தனர். அப்பாடலால் நூல் முழுமையும் கேட்க விரும்பினன்; அமைச்சர் கேட்கலாகாதெனத் தடுக்கவும், கேளாமல் எல்லாப் பாடல்களையும் கேட்டு இறந்தான் என்று ஒரு கர்ண பரம்பரைக்கதை வழங்கப்படுகிறது. இதற்கேற்ப இந்நூலில் பலவகைச் சொற்கள் வந்துள்ளன. 'நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற சோமேசர் வெண்பாவினாலும் இவ்வரலாற்றை நன் கறியலாம்.

இனி, கடவுளைப் பற்றிய கலம்பகத்தைப் பார்ப்போம். திருவரங்கக் கலம்பகம் என்பது அரங்கநாதரைப்பற்றிய கலம்பகம். ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள திருமாலுக்கு அரங்கநாதர் என்பது பெயராகும். இதனை இயற்றியவர் பிள்ளைப் பெருமாளையங்கார். இவர் எழுநூறு வருஷங்களுக்கு முன்பிருந்தவர் என்பர்.

உலகத்தவரே, நீங்கள் மனைவி, மக்கள், சுற்றம், குடும்பம் முதலியவற்றைத் துறந்து காடேனும் மலையேனும் அடைந்து கோடைகாலத்தில் கைகளை மேலே

தூக்கிக்கொண்டு ஒருகாலை முழந்தாளின்மீது ஊன்றிக் கொண்டு நெருப்பின் மத்தியில் நின்றும், பூமியை வலம் வந்தும், மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் தடாகம் முதலிய நீர்நிலைகளில் பாசி படியும்படி நின்றும், சடையைத்தரித்தும், மொட்டை அடித்தும், ஆடையின்றியும், உணவு இன்றியும் காய் கிழங்கு, கனி, சருகு, நீர், காற்று முதலியவைகளில் ஒன்றை அருந்தியும் மணலிலேனும் கற்கள் நிறைந்த இடத்திலேனும் உடலை வருத்தி உறங்கியும் நற்கதி யடைவதற்கு இவ்வாருகிய தவத்தை விரும்புகின்றீர்களே. அவ்வாறு வருந்திச் செய்யவேண்டா. உயிர்களிடத்தில் பெற்ற தாயைக் காட்டிலும் அன்புடையவனும், திருமகளுக்கும் நிலமகளுக்கும் கணவனும், ஆதிசேடனைப் பாயலாகக் கொண்டவனுமான அரங்கநாதனை வணங்குங்கள்: உங்கள் பிறவிநோயை யொழிக்கலாமென்னும் பொருள்பட வந்துள்ள பாடலைக் கேளுங்கள்.

காயிலை தின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்
தாயினுமன்பன், பூமகள் நண்பன், தடநாகப்
பாயன்முகுந்தன், கோயிலரங்கம் பணிவீரே.

இச்செய்யுள் தவம் என்னும் உறுப்பு.

முகுந்தன்-திருமால் அரங்கநாதர்.

மறக்குடியில் பிறந்தவர்கள் மிக்க வீரர்கள்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். தெய்வ வழிபாடு உடையவர்கள். அழகு உடையவர்கள். இவர்கள் குடியில் தோன்றிய பெண்களை அரசர்கள் விரும்புவதுண்டு. ஓர் அரசன் மறக்குடிப்பெண்ணை விரும்பித்தன் பிரதாபங்களை எழுதித் தூதன் மூலமாக மறக்குடித் தலைவனுக்கு அனுப்புகின்றுன். அத்தூதன் ஓலையுடன் வந்து மறக்

குடித் தலைவனைக் கண்டு சில வார்த்தை கூறி மணம் பேசுகிறான், அப் பெண்ணிற்குரிய மறக்குடியினர் கோபங்கொண்டு மணம் மறுத்து அவ்வரசனை இகழ்ந்து தங்கள் குடியின் பெருமையை எடுத்துரைக்கின்றனர்.

எங்கள் பெண்ணை மணம் பேசுவதற்கு வந்த தூதனே! கறையானால் அரிக்கப்பட்ட உன் ஓலை எங்களுக்குப் பயன்படுமோ? திருவரங்கநாதரின் திருவடிகளில் மனம் வைத்த மறவர்களது மகளை விரும்பி முன்னாளிலே பட்டம் தரித்த அரசர்கள் பட்டபாடுகளை எங்கள் ஊருக்குள் வந்து பாரடா. எங்கள் வீட்டு வாசலில் வைத்து மூடும் படல் அவர்கள் பிடித்து வந்த குடைகளாகும். அவ்வரசர்கள் தலையில் தரித்த கிரீடங்கள் எங்களுக்குத் தினையளக்க உபயோகப்படும் மரக்காலும் படியும் ஆகும். அவர்களுக்கு விசிக்கொண்டு வந்த சாமரங்கள் எங்கள் சிறு வீட்டிற்கு மேலே மூடுகின்ற தாள் கற்றைகளாகும். அவர்கள் தோல்வியடைந்து எறிந்துபோன வில்லும், வாளும், வேலும் எங்கள் வீட்டின் நாற்புறங்களிலும் வேலியாக உள்ளன. ஆதலால் எங்கள் பெண்ணை உங்கள் அரசன் விரும்புவது தகுதியன்று என்னும் பொருள் அமைந்த பாடலைப் பாருங்கள்.

பேச வந்ததூத! செல்லரித்த வோலை செல்லுமோ
பெருவரங்கள் அருள் அரங்கர், பின்னை கேள்வர் தாளிலே
பாசம் வைத்த மறவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா
வாசலுக்கிரும்படல் கவித்துவந்த கவிகை, மா
மகுட கோடி, தினையளக்க வைத்த காலு நாழியும்,
வீசு சாமரங்குடில் தொடுத்த கற்றை, சுற்றிலும்
வேலியிட்டதவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே

இச்செய்யுள் மறம் என்னும் உறுப்பு. பாசம்-அன்பு. கவிகை-குடை. கால்-மரக்கால். நாழி-படி.

திருவருணைக்கலம்பகம் என்பது திருவருணையைப் பற்றிக் கூறும் கலம்பகம். திரு-மேன்மையைக் குறிக்கும். அருணை என்பது அருணாசலம் என்பதன் மரூஉ மொழி, அருணாசலம் - திருவண்ணாமலை. இங்கு எழுந்தருளி இருக்கும் சிவபெருமான் விஷயமாகப் பாடப்பெற்ற நூல் திருவருணைக் கலம்பகம். இதனைப் பாடியவர் சைவ எல்லப்ப நாவலர். காலம் 17-ம் நூற்றாண்டு.

குறம் என்பது மானிடப் பெண்களில் ஒருத்தி கடவுளர் தலைவனைக் கண்டு விரும்புகிறாள். அவனைத் தான் அடையும் பாக்கியம் தனக்குக் கிடைக்குமோ என்று வருந்துகிறாள், அந்நிலையில் குறத்தியாகிய கட்டுவிச்சி யொருத்தி அங்குத் தோன்றி குறி சொல்லத் தொடங்கி உன்னிடத்தில் இன்ன குறிகள் காணப்படுகின்றமையால் உன்னுடைய எண்ணம் நிறைவேறும் என்று அப்பெண்ணிற்குக் கூறுவதாகச் செய்யுள் பாடுவது.

தென்னாட்டில் குறத்திகள் கையில் பிரம்பு கொண்டு பிறர் கையிலுள்ள ரேகைகளைப் பார்த்துப் பின்னர் நடக்கப்போகும் விஷயங்களை முன்னே எடுத்துச்சொல்வது இன்றும் நடந்துவரும் ஒரு செயலாகும்.

குறத்தி தன் முன்னின்ற பெண்களைப் பார்த்து அம்மையீர்! யாம் குறி சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் முறத்திலே கொண்டுவந்து கொடுத்த நெல்லை மூன்று கூறாக்கினேன், ஒரு கூற்றை எடுத்து எண்ணிப் பார்த்தேன் நெல் ஒற்றைப்பட்டது, ஒற்றைப்பட வருவது நன்மையாகும், இரட்டைப்பட வருவது தீமையாகும். ஆகையால் மான் கன்றினையும் மழு

என்னும் ஆயுதத்தையும் கையில் கொண்ட ஒருவர் என்முன் தோன்றினர். அவர் கழுத்தளவில் நீலநிறம் உள்ளவர், கையில் பிரம கபாலத்தை ஏந்தியவர். அத் தலைவரை அருணையில் சென்று காணவேண்டும். அவர் பெயர் தேவராயர், நாம் அவரை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தையும் கண்டதில்லை. ஆதலால் அத்தலைவரே இங்கு ஆசையால் வருந்துகின்ற தலைமகளது துயரைப் போக்குவார். இவள் நெற்றியிலே விபூதியைப் பூசுங் கள் என்று கூறும் கருத்தமைந்த பாடலைக் கேளுங்கள்.

'ஒன்று மூன்று நாமுரைக்கவந்து கேளு மரிவை மீர்
உதயமான சுளகுநெல்லு ஒற்றைப்பட்டதாதலால்
கன்று மானு மழுவுமாக வொருவர்வந்து தோன்றினர்
கண்டமட்டிலே கறுப்பர், கைக்கபாலர், அவரையுஞ்
சென்றுநாடில் அருணைமீது காணலாகும் நாமமுந்
தேவராயர் அவரலாது தெய்வம் வேறு கண்டிலேம்,
நின்று வாடுமிவள் தன்னாசை யிடர் தவிர்ப்பராதலான்
நீறு கொண்டு மூன்றிரேகை நெற்றி மீதிலெழுதுமே.

இச் செய்யுள் குறம் என்னும் உறுப்பு.

பிரசித்திபெற்ற கலம்பகங்களில் நந்திக்கலம்பக மும், திருவரங்கக் கலம்பகமும் மிகச் சிறந்தன. தமிழில் இவைபோன்ற அழகர்கலம்பகம், மதுரைக்கலம்பகம் வெங்கைக்கலம்பகம், திருவாரூர்க்கலம்பகம், செந்திற் கலம்பகம், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், காசிக் கலம்பகம் முதலிய பல கலம்பகங்கள் காணப்படுகின் றன. கலம்பகங்களில் பிரபந்தத் தலைவனுடைய பெரு மையும், தலைவன், தலைவி கூற்றுகளும் மடக்கு சொற் களும் சொல்நயங்களும். பொருள் நயங்களும் படிக்க இனிய ஓசை நயங்களும் காணப்படுகின்றன. இவை களைப்படித்து நாம் இன்புறுவோமாக.

# 4. தூது

தூது என்பது ஒருவர் தம்முடைய கருத்தை வேறொருவருக்கு இடையில் நின்ற ஒருவர் மூலமாகக் கூறிவிடுப்பது. தலைவி, தலைவன் பாலும், [தலைவன் மணத்தின் பொருட்டுத் தலைவியைச் சார்ந்தோரிடத்தும், ஊடலை நீக்கும் பொருட்டுத் தலைவியினபாலும், ] அரசர்கள் பகையரசரிடத்தும், புலவர்கள் வள்ளல்களிடத்தும் விடுப்பது வழக்கம்.

குணமாலை, கிளியை, ஜீவகன்பால் விடுத்தது போன்றவை, தலைவி தலைவனுக்குத் தூது விட்டனவாம். சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைத் தூது விட்டதுவும் பிறவும், தலைவியின் ஊடலை நீக்கத் தலைவன் தூது விட்டனவாம். அங்கதன், கிருஷ்ணன் தூது முதலியன, பழைய அரசர்பால் விட்ட தூதுக்களாம். கோப்பெருஞ் சோழனிடத்தில் அன்னச் சேவலை பிசிராந்தையார் விடுத்ததாகப் புறநானூற்றில் கூறப்படும் தூது, புலவர் வள்ளல்பால் விடுத்த தூதாகும். இவற்றுள் தலைவி, தலைவனிடத்தில் விடுந் தூதும், தலைவன் தலைவியினிடத்து விடுந்தூதும் பொருளாக அமைந்த தனி நூல்களைச் சிறு பிரபந்தம் என்பர்; தமிழில் உள்ள தூது பிரபந்தங்களில் தலைவி தலைவன்பால் தூது விட்டவையே பெரும்பாலுங் காணப்படுகின்றன.

ஒருவர் கருத்தை மற்றொருவர்க்கு உணர்த்தும் ஆற்றலையுடைய மக்களைத் தூது விடுத்தலே உலக வழக்கில் பொருத்தமுடையது. ஆயினும் தலைவனைப் பிரிந்த காம மயக்கத்தால் தலைவி அஃறிணைப் பொருள்

களையும், தூது விடுப்பதாகச் செய்யுள் செய்தல் புலவர் மரபு. அஃறிணைப் பொருள்களை யங்ஙனம் அழைத்துக் கூறுதலைக் காம மிக்கக் கழிபடர் கிளவியென இலக்கண நூலார் கூறுவர்.

கவிஞர், தம்முடைய கவித்திறமையைக் காட்டுதற்கு நிலைக்களனாக அமைத்துக்கொண்ட அமைப்பாகிய இது, கற்பனை இலக்கியமேயன்றி, இயற்கையாக நிகழத் தகுவதன்று. சங்க நூல்களிலும் ஆழ்வார், நாயன்மார் முதலியோர்களது பாடல்களிலும், இத்தகைய பாடல்களைக் காணலாம். இலக்கண ஆசிரியர் அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப் புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் இப்பத்தும் தூது விடுதற்குரிய பொருள்கள் என்று கூறியுளார். இப்பத்தையுமல்லாது, பணம், துகில், தமிழ், மான், வசனம், சவ்வாது, நெல், விறலி, புகையிலை முதலியவற்றைத் தூது விட்டதாகப் பிரபந்தங்கள் காணப்படுகின்றன. தத்தம் கற்பனைக்குப் பொருத்தமுடையதாக எவ்வெப் பொருள்கள் இருக்கின்றனவோ அவ்வப் பொருள்களைத் தூது விடுத்ததாகப் புலவர்கள் பிரபந்தங்களை இயற்றி இருக்கின்றனர். அவற்றுள் தமிழ் விடு தூதினை ஆராய்வோம்.

தமிழ் விடு தூது என்பது மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள் மீது காதல்கொண்ட ஒரு தலைவி விரக வேதனை யுற்றுத் தமிழை யவர்பால் தூது விடுத்ததாக ஒரு சிறந்த புலவரால் இயற்றப்பெற்றது.

இதில், தமிழினுடைய சிறப்பையும் சோமசுந்தரக் கடவுளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும், சோமசுந்தரக் கடவுளின் பெருமைகளையும் பல படியாக

எடுத்துக் கூறியதுடன் நாயன்மார்களுடைய அற்புதச் செயல்களையும், சிவபெருமான் செய்த திருவிளையாடல் களையும் அழகு பெற எடுத்துக் கூறியுளார்.

தலைவி தன் கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறு வதற் கேற்றது தமிழே எனக் கருதி, தமிழை நோக்கி சுவாமி நின்னைக் கண்டு வணங்கின் எனது துன்பம் தீரு மென்று எண்ணி உன் அழகிய அடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு துதிக்கின்றேன். நீ மெல்லிய பஞ் சாலாகாத நூல் ஆவாய். பலர் திரிக்காத பாவு ஆவாய். அழுக்குப் படியாத அழகிய கலையாவாய். நிறம் பொருந் தாத செந்தமிழாவாய். புலவர் அகங்கரியாது நெல் விளைவிக்கும் வயல் ஆவாய் என்று பாராட்டுபவளாய்,

என்னடிக ளேயுனைக் கண்டேத்தினிடர் தீருமென் றுன்
பொன்னடி களேபுகலாப் போற்றினேன்-பன்னியமென்
பஞ்சிபடா நூலே பலர் நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக்கேறு வியற்க லையே - விஞ்சுநிறம்
தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகம்
தீயாது சொல்விளையும் செய்யுளே

எனக் கூறியுளான், இதில் நூல், பா, கலை என்பன தமிழுக்கும் ஆடைக்கும் இருபொருள் பயக்கும் வண் ணம் சொற்களை அமைத்திருப்பது சுவைத்தற்குரிய தாம்.

மற்றும் ஆழ்வார்களும், நாயன்மார்களும், பிற புலவர்களும் இறைவனைத் தொழுது இனிய பல அருட்பாக்களைப் பாடிப் பல அற்புதச் செயல்களை நிகழ்த்தி யிருக்கின்றார்கள். இதனால் தமிழ் மொழியை தெய்வ மொழியென்றும் தமிழ்ப் புலவர்களைத் தெய்

வப் புலவர்கள் என்றும் ஆன்றோர் கூறுவர். இதற்கேற்ப இந் நூலில் இருந்து ரசமான ஒரு நிகழ்ச்சியை அறியலாம்.

ஆழ்வார்களுள் ஒருவராகிய திருமழிசையாழ்வார் காஞ்சியில் எழுந்தருளியிருக்கும்போது அவர் தங்கியிருந்த இடத்தில் ஒரு கிழவி தொண்டு புரிந்து வந்தாள். ஆழ்வாரின் சிஷ்யனாகிய கணிகண்ணன், கிழவியின் தொண்டுக்கு இரங்கி, ஒரு பாசுரம் பாடிக் கிழவியைக் குமரியாக்கினார். இந் நிகழ்ச்சியை அறிந்த அவ்வூர் பல்லவராயன் என்னும் அரசன், தன்னையும் இளைஞனாக ஆக்குமாறு வேண்டினன். அதற்கு கணி கண்ணன் இசையாமை கண்டு கோபங்கொண்டு தன் நாட்டைவிட்டு ஓட்டம்பிடிக்க உத்திரவிட்டான். கணி கண்ணன் இந் நிகழ்ச்சியை ஆழ்வாருக்குணர்த்தி, அரசன் உத்திரவுக்குப் பணிந்து ஊரைவிட்டுப் புறப்பட்டான். உடனே திருமழிசையாழ்வாரும் தாம் வழிபட்டுவந்த அவ்வூர்த் திருமாலாகிய பெருமானை நோக்கி, அரசன் ஆணையால் கணிகண்ணன் போகின்றான் நானும் கணி கண்ணன் பின் செல்கின்றேன். நீயும் நினது படுக்கையுடன் காஞ்சியைவிட்டுப் புறப்படவேண்டும் என்று தொழுது வணங்கி,

கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா, நீ கிடக்க வேண்டா - துணிவுடைய
செந்நாப் புலவன் யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்

எனப் பாடினர். திருமாலும் அங்ஙனமே திருமழிசையாழ்வார், தமிழ்ச்சுவையில் மயங்கித் தம் படுக்கையுடன் பின் சென்றார் என்ற நிகழ்ச்சியைக் கேட்கும் எந்தத் தமிழ் மகனுக்கும் உள்ளத்தில் உவகை வெள்ளம் பாயும் என்பதில் ஐயமில்லை.

இந் நிகழ்ச்சியை, தூது விடக்கருதிய தலைவி, தமிழை நோக்கி நீ ஆதிசேஷனைப் படுக்கையாக உடைய திருமாலைத் தொடர்ந்தாயோ அன்றியத் திருமால் நின்னைத் தொடர்ந்தாரோவெனப் பண்டைய நிகழ்ச்சியை நினைவூட்டித் தமிழுக்கு மகிழ்வூட்டும் முறையில் கூறுபவளாய்,

ஆடரவத் — — —.

தாழ் பாயலாள்ரை நீ தானே தொடர்ந்தாயோ
சூழ்பாயோடுன்னைத் தொடர்ந்தாரோ

என ஊக்க மூட்டுகின்றாள். இதனால் தமிழ் மொழியின் சுவையிலும், அம் மொழியுணர்ந்த புலவர்களின் அன்பிலும் கடவுள் எத்துணை ஈடுபட்டுளார் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

பின்னர், தமிழின் வளர்ச்சியைக் கூறுபவளாய், தமிழே புலவர்கள், சொல் என்னும் வித்தை விதைத்து செய்யுள் என்னும் வயலிலே நின்னை முளைக்கச் செய்தனர். பின் கற்றறிவிலாதப் புன்புலவர்களாகிய களைகளால் நீ அழிவுறாது, பாட்டில் வல்லப் பிள்ளைப் பாண்டியன் வில்லிப்புத்தூரார் ஓட்டக்கூத்தர் ஆகிய இவர்கள், அப் புன்புலவர்களாகிய களைகளை, குட்டியும், செவியறுத்தும், குனியவைத்து வெட்டியும், அழித்து, நினக்கு வளஞ்செய்ய நீ இனிதாகப் பணைத்து வளர்ந்து, பாலைப் போலும், திராட்சை, வாழை தென்னை இவைகளின் கனிபோலும், கரும்பின் சுவைபோலும், தீஞ்சுவை பெற்றும் இன்னும் அமுதாயும், அதற்கு மேலான முத்திக் கனியாயும் இருக்கின்ற முத்தமிழே, உன்னுடன் உரைத்தற்கொன்று உண்டு எனத் தமிழின் இனிமையைப் புலப்படுத்தி,

பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் வில்லி
யொட்டக்
கூத்தனிவர்க் கல்லாது கோட்டி கொள்ளுஞ் சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக்களை பறிக்க மேலாய்த்தூர் கட்டி-
வளர்ந்தனை பான் முந்திரிகை வாழைக்கனியாய்
இளர்ந்த கரும்பாய் நாளி கேரத் திளங்கனியாய்
தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக்கனியே யென் முத்தமிழே-புத்திக்குள்
உண்ணப்படும் தேனே உன்னோடு உவந்துரைக்கும்
விண்ணப்பமுண்டு விளம்பக் கேள்

எனப் பாராட்டிக் கூறியது, தமிழன்பர்களது அறி வெனும் புலனுக்கு ஆரமிழ்தாகும்.

இனி, கிள்ளை விடு தூதினை ஆராய்வோம். இந் நூல் திருமால் இருஞ்சோலையில் எழுந்தருளியுள்ள சௌந்திரராஜப் பெருமாள் பவனி வருகையில் கண்டு காதலுற்ற தலைவி, கிள்ளையைத் தூது விட்டதாக, இரு நூறு ஆண்டுகட்குமுன் மதுரையில் வாழ்ந்த பல பட்டடைச்சொக்கநாதப்புலவரால் இயற்றப்பெற்றது.

கிளியைத் தூதுவிடக் கருதிய தலைவி, கிள்ளையின் பெருமையைப் பாராட்டி, நீயே என் கருத்தை இனி துரைக்கும் எழிலுடையாய், நின்னைச் சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை என உலகர் புகழ்ந்து சொல்லு வர், நீ உணவின்றிப் பால் குடிக்கும் பச்சைக் குழந்தை யாய் இருப்பினும் நின்னிடம் உள்ள வாஞ்சையால் நின் கால்பிடிப்போர் கணக்கிலராவர். மன்மதனால் நேரும் காம மயக்கத்தைப் போக்கும் பச்சிலை நிறத்தை நீ பெற் றிருக்கின்றாய், பெண்களின் மனதில் தோன்றும் அச்சம்

என்னும் காட்டை எரிக்கவோ, வன்னியென்னும் மறு பெயர் கொண்டாய் எனப் பலவாறு முகமன் செய்து,

சொன்னத்தைச் சொல்லும் என்று சொல்லப் பெயர்
கொண்டாய்
பின்னத்தைப் போலுமொரு பேறுமுண்டோ அன்ன
மின்றிப்
பால்குடிக்கும் பச்சைக் குழந்தை நீயானாலும்
கால் பிடிப்பார் கோடி பேர்கண்டாயே - மால்பிடித்தோர்
கைச்சிலை வேளால் வருந்துங்காம நோய் தீர்ப்பதற்கோ
பச்சிலை ரூபம் படைத்திருந்தாய் - அச்ச
மனப் பேதையார் மால் வனஞ்சுடவோ வன்னி
எனப்பேர் படைத்தாயியம்பாய் — — —

எனக் கூறியுளாள். இதில், கிளி பால் குடிப்பதாலும் பச்சை நிறம் பெற்றிருப்பதாலும் பச்சிளங் குழந்தை என்றும் கிள்ளையின் காலைக் கைமீது அமர்த்தி வைத்திருப்பது உலகினர் வழக்கமாதலின் அதைப் பணிவு காட்டும் முறையில் கால் பிடிப்பார் பலர் என்றும், கிளி பச்சை நிறம் பெற்றிருப்பதைக் காம நோய்களையும் பச்சிலை வடிவு என்றும், புலவர் சமத்காரந் தோன்றக் கூறியிருப்பது பாராட்டற் குரியது.

இங்ஙனம் கிளியைப் புகழ்ந்து கூறியபின் தலைவராகிய அழகரிடத்தில் தூது சொல்ல வேண்டுமென்பாள் தான் காதலித்த தலைவன் முழுமுதற் கடவுள் என்னும் உண்மையைக் கிள்ளைக்குணர்த்த எண்ணினள். நான்மறையின் வழி நூலாகிய நாலாயிரப் பிரபந்தத்தைப் பாடிய ஆழ்வார்களின் மனத்தில் அமர்ந்து இருக்கும் அவ்வழகர் ஒருருவாய் இருந்தே படைப்பு, காப்பு, அழிப்பு ஆகிய முத்தொழிலையும் புரி

யும் உத்தமன் என்று திருமாலுக்குப் பரத்துவம் கூறு பவளாய்,

மூதுலகைத் —

தந்திடுவோ னுந்துடைப்போன்ருனு நானென்று திரு
உந்தியால் வாயாலுரைத்திடுவோன் - பைந்தமிழால்
ஆதிமறை நான்கையு நாலாயிரத்து நற்கவியா
ஓதும்பதி ஞெருவர் உள்ளத்தான்

எனத் தன் கருத்தில் உறையும் காதலன் பெருமையைப் புலப்படக் கூறியுள்ளாள்.

இங்ஙனம் பெருமை வாய்ந்த அழகரிடத்துச் சென்று தூது உரைக்கும் முறை சொல்லுபவளாய்க் கிளியை நோக்கி நீ அழகர் பலர் சூழ இருக்கும்போது சென்று சொல்லின் நின்சொல் அவர் செவியில் செல்லாது ஆகையால் பள்ளியறைக்கு மெல்லச் செல்லும் போது பக்கம் இருந்து பார்த்துக்கூட யாரும் போகா திருப்பின் நீயுரை என்று உபாயம் கூறியதை?

ஆர்த்த திருவோலக்கமாயிருப்பின் அப்பொழுதுன்
வார்த்தை திருச் செவியில் வாயாது, சேர்த்தியிலே
மெள்ள எழுந்தருளும் வேளேபார்த்து அவ்வேளே
சொல்ல எழுந்தொருவர் சொல்லா முன் நீயுரைப்பாய்

என வரும் அடிகளால் அறியலாம். இம்முறையே நளனிடம் * சென்று செய்தி சொல்லும் சந்தர்ப்ப முறையை,

வேற்றரசர் திறை கொணரும் வேலையிலும் சொல்லற்க
மாற்றரசர் பால்வெகுளும் மயக்கத்தும் வகுத்துரையேல்
தேற்ற முடை மதி வல்லோர் தேர்ச்சியினுந் தெரிந்துரையேல்
சாற்றினுரைத் தனவெல்லாந் தவருதலறிதியே

என வரும் செய்யுளால் அறியலாம்.

இனி பண விடு தூதினை ஆராய்வோம்.

இந்நூல் இற்றைக்கு 250 ஆண்டுகளுக்கு முன்பு திருவாமாத்தூரில் வாழ்ந்த வேங்கடேசனைத் தலைவராகக் கொண்டு இயற்றப் பெற்றது.

தலைவனிடம் பணத்தினைத் தூது விடக்கருதிய தலைவி பணத்தினை நோக்கிப் பணமே, என்னைப் படைத்த செல்வமே, நட்பே, ஆருயிரே, கண்ணே, குணப்பொருளே, நீ பல வடிவம் எடுத்துச் செய்யும் இந்திரசாலவித்தை பலரறியும் தன்மையதோ உலகில் மலையை அணுவாக்குவாய். அணுவை மலையாக்குவாய். இரக்கமின்றி பிறரை வெட்டுவாய். பிறர் வெட்டுதலைத் தடுப்பாய். வரிந்து கட்டுவாய். கட்டிய கட்டவிழ்ப்பாய். உறவினரைப் பகையாக்குவாய், பகைமை நீக்கி நட்பாக்குவாய். காடு நாடாக்குவாய். கண்முன்பே நாடு காடாக்குவாய் என்று பாராட்டி,

பணமே எனைப்படைத்த பாக்கியவா னேவங்
கணமே யாருயிரே கண்ணே - குண நிதியே
கோலம் பல வெடுத்துக் கோவோ நீ செய்யுமிந்திர
சாலம் பிறரறியத் தக்கதோ - ஞாலமிசை
மேரு அணுவாக்கி விடுவாய் அணுவையொரு
பாரமகமேருவெனப் பண்ணுவாய் - ஈரமின்றி
வெட்டுவாய் வெட்டுதலை மீட்பாய் - வரிந்திறுகக்
கட்டுவாய் கட்டுங் கயிறு அவிழ்ப்பாய் - கிட்டும்
உறவிற் பகை விளைப்பாய் உட்பகையாம் பண்டை
குறையைத் தவிர்த்துறவு கொள்ளுவாய் துறைவீட்டு
காடு நாடாக்குவாய் கண்விழித்து மூடுமுன்பே
நாடு காடாக்குவாய் நம்பி நீ

எனப் பணத்தின் பலவிதச் செயலையும் கூறியுளாள். மற்றும் பணம் நமக்குப் பயன்படும் முறையைத் தலைவி கூற்றாக ஆசிரியர் அமைத்துப் பணமே நின்

னைப் பற்றுதவர் பிறப்புப் பிணம் என்று உலகினரால் சொல்லப்படும். தனது நிலைக்கு ஒவ்வாத தாழ்குல மானாலும் வலிய வந்து பெண் கொடுக்கும் மாமனு வாய். கல்வி கற்பிக்குந் தந்தையாயும் கருணை நிறைந்த சோறு ஊட்டும் அன்னையாயும் இருக்கின்றாய் என்ற கருத்தை,

பணம் என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம் என்பர் கண்டாய்ப் பெரியோய்-இணையிலா
தந்தரத்துக் கொவ்வாது தாழ்ந்த குலமானாலும்
வந்தெடுத்துப் பெண் கொடுக்கும் மாமனே
ஓதுகலை ஞானம் உள்ளதெல்லாம் கற்று நன்றாய்ச்
சாதிக்க வைக்கும் தகப்பனே-பேதிக்கப்
போய்க் கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறு ஊட்டும் மாதாவே

என வரும் அடிகளால் பணம் நமக்குப் பந்துக்களாக வும் உற்றார் பெற்றாராயும் இருந்து உதவுதலை யறிய் லாம்.

நாம் இதுகாறும் தூது இன்னதென்பதையும் தூது விடுதற்குரிய பொருள்கள் யாவை யென்பதை யும் தமிழ் மொழியை அரசனாக உருவகித்துள்ள அழ கையும் தமிழ் வளர்ந்த வரலாற்றினையும் ஆழ்வார் பாடலுக்கிரங்கித் திருமால் பின் சென்றதால் தமிழின் தெய்வத் தன்மையையும் கிளியின் சிறப்பையும் அழ கரின் பெருமையையும், பணத்தின் சிறப்பையும் பணம் உறவாகும் முறையையும் ஒருவாறு அறிந்தோம். இது போன்ற பிற பிரபந்தங்களையும் கசடறக் கற்றுக் களிப் புறக் கேட்டு இன்புறுவோமாக.

# 5. காதல்

காதல் என்பது என்ன? உள்ளத்தில் தோன்றும் அன்பு உணர்ச்சிதான் அது. ஆண் பெண் இருவரும் ஒருவரை ஒருவர் காணுங்கால், இன்னதென்று விவரிக்க முடியாத ஓர் இன்ப நிலையை அடைகின்றனர். அந்நிலையில் உண்டாகும் அன்பு உணர்ச்சியையே காதல் என்று உலகம் கூறுகிறது,

காதல் உணர்ச்சியைச் சங்க இலக்கியங்கள், திருக்குறள் காமத்துப் பால் முதலியவற்றில் தனித்தனியாக-துறைகளில் வெவ்வேறு நிலைகளைச் சித்தரிக்கின்றன. அவற்றில் இக்காதல், காமம், கேண்மை, தொடர்பு, நட்பு, நயம் என்னும் பெயர்களால் வழங்கும்.

இவ்வன்பு பிறவி தோறும் தொடர்ந்து வரும் என்பது பெரியோர் கருத்தாம். இவ்வாறு வரும் அன்பு நல் ஊழினால் தலைவனையும் தலைவியையும் ஒன்றுபடுத்துதற்குக் காரணமாகிறது.

ஒரு தலைவன் முன்பு அறியாத தலைவி ஒருத்தியைக் கண்டு ஊழ்வினை காரணமாக அன்பு கொள்ளுகிறான். நெடுநாள் பழகியவரிடத்தும் உண்டாகாத தனியன்பு உண்டாகி விடுகிறது. இவ்வாறு இவ்வுலகத்தில் முன்பு பழக்கமில்லாத தம் இருவருடைய மனமும் ஒற்றுமைப்பட்டதை நினைத்து வியக்கிறான்: 'என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் என்ன உறவினர்? ஓர் உறவும் உடையவர் அல்லரே. என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவுடையவர்? அவர்களுக்கும் கேண்மை இல்லையே. யானும் நீயும் எப்படி அறிவோம்? இதுவரையிலும் முன்பு அறிந்திலமே.

இப்படி இருக்கவும் செம்மையான நிலத்தில் பெய்த மழைநீர் அந்நிலத்தோடு இயைவது போல நம் இருவருடைய அன்புடை நெஞ்சமும் தாமே கலந்தனவே. இது என்ன வியப்பு' என்கிருன். செய்யுளைக் கேளுங்கள்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெய்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

இவ்வாறு தலைவன் தலைவியரிடம் மறைந்திருந்த காதல் தக்க பருவத்தில் சூரியனைக் கண்ட தாமரை போல மலர்கின்றது. ஊழ் கூட்டப் பட்டாரைக் காணும் போது அது வெளிப்படும். கண்ட மாத்திரத்தில் நெஞ்சம் கலந்த காதல் பண்டை உறுதியைப் பெற்று விடுகிறது. எத்தகைய துன்பங்களையும் தாங்கும் வலிமையுடையதாக விளங்குகிறது.

இந் நிலையைக் கம்பர் அழகாகச் சித்தரிக்கின்ருர். மிதிலை நகர வீதி வழியே கோசிக முனிவன் முன்செல்ல இலக்குவனுடன் பின் செல்லுகிருன் இராமன். அழகே வடிவெடுத்தாற் போன்ற சீதை கன்னி மாடத்தில் நிற்கின்ருள். ஒருவரை ஒருவர் கண்டு விட்டனர். 'அண்ணலும் நோக்கினுன். அவளும் நோக்கினுள். நிகழ்ந்தது என்ன? கண்ணொடு கண்ணினை கவ்வின; ஒன்றை ஒன்று உண்ணவும் நிலைபெருது உணர்வும். ஒன்றிவிட்டனவாம்.

இத்தகைய காதலர்களின் அன்பின் வழி நிகழும் பலவகை நிகழ்ச்சிகளையும், அவர்கள் மணவாழ்க்கை

பெற்று இல்லறம் நடத்தும் முறையையும் கோவைப் படுத்திப் பல துறைகளில் அமைத்து அகப் பொருள் என நெறி படுத்தினர் பண்டையோர். இக்காத லின்பம், உள்ளத்துணர்வால் நுகர்ந்து இன்பமுறுவ தொரு பொருளாதலின் அதனை அகப்பொருள் என்ற னர். இது களவு, கற்பு என இருவகைப்படும். அவை மணம் புரிந்து வாழ்வதற்கு முற்பட்ட களவு ஒழுக்க மும் அதற்குப் பிற்பட்ட கற்பொழுக்கமுமாம். கள வொழுக்கமாவது தலைவனும் தலைவியுந்தாமே அன் புற்று, பிறர் தம் மறைந்த ஒழுக்கத்தை அறியாதவாறு நடத்தலாம். இக்களவு ஒழுக்கத்தைப் பின்பற்றியே பிற்காலத்தில் காதல் என்னும் பிரபந்தம் தோன்றிய தாகும்.

பிற்காலப் புலவர் கடவுளையோ மனிதர்களையோ புகழ வேண்டுமென்றால் அதற்குப் பல வடிவங்களை அமைத் தனர். பலவகைப் பாடல்கள், அலங்காரங்கள், பிரபந் தங்கள், காவியங்கள். இவையெல்லாம் அவ்வடிவங் களின் பல வேறு அளவுடைய வகைகளே: அப்படிப் பிறந்த பிரபந்தங்கள் 96 வகை என்று கூறி வந்தனர். ஆனால் இப்பொழுது நூற்றுக்கு மேற்பட்டவற்றைப் பார்க்கலாம். காதல், குறவஞ்சி முதலியன அவ்வரம்பை மீறித் தோன்றியனவே. புலவர்கள் கற்பனைக்கு வரம் பில்லை அல்லவா?

சிறு பிரபந்தம் என்றால் அதற்கு ஒரு தலைவன் வேண்டும். கூளப்பநாயக்கன் காதலில் நாகம கூளப்ப நாயக்கனே தலைவன். 17-ம் நூற்றாண்டின் இறுதியில் நிலக்கோட்டையை ஆட்சி செய்தவன். திருமலை நாயக் கரின் மைத்துனன். இவனை நாயகனாகக் கொண்ட

காதல் என்றும் பிரபந்தத்தை முதல் முதல் தோற்று வித்தவர் சுப்பிர தீபக் கவிராயரே.

கவிராயர் தம் வறுமையைப் போக்கிக் கொள்ள வழி தேடினர்.

தமிழருமை அறிந்த அரசர் அக்காலத்தில் இல்லே. தென்னுட்டை ஆட்சிசெய்தவர்கள் நாயக்க அரசர்களின் பிரதிநிதிகளான பாளையக்காரர்களே. தெலுங்கைத் தாய் மொழியாக உடைய இவரிடம் தமிழ்ப் புலமையை உணர்த்திப் பரிசு பெறுவது எளிதன்று; சிற்றின்பத்தில் ஈடுபட்டுள்ள அவர்களுக்குச் சிற்றின்பச் சுவையூட்டி மகிழ்வித்துப் பரிசு பெறுவதே எளிதெனக் கண்டனர். இதன் பயனக எழுந்த நூல்களில் இக் காதலும் ஒன்ரு கும். 'சிவனது நெற்றிக்கண்ணுல் எரிக்கப்படாத மன் மதனே இவன்' என்று தலேவனைப் புகழ்ந்து அவனைக் கண்டு ஒரு மங்கை காதல் கொண்டாள் என்று புனைந்து ரைக்கலாயினர், கதைப் போக்கில் களவொழுக்கத் தைப் பண்டை முறைக்கு மாறுபடாது சிறப்பித்துள் ளனர். ஆனல் அளவுக்கு மிஞ்சிச் சிருங்காரச் சுவை புலப்படப் பாடப்பட்டுள்ளது. இதற்கு அக்கால நிலேயே காரணம்.

கதாநாயகன், வேட்டைக்காரர்களும் சேனைத் தலே வர்களும் புடைசூழ வேட்டைக்குச் செல்லுகிருன். வீரர்கள் காட்டைக்கலேத்து வேட்டையாடுகின்றனர். நற்சகுனத்தோடு புறப்பட்ட தலேவனுக்கு வலேகளிலும் சிக்காத மானென்று எதிர்ப்படுகிறது. பின் தொடர் கிருன். பொன்மானைத் தொடர்ந்த இராமனைப் போல அந்த மான் சீதையைப் பிரித்தாலும் இந்த மான் ஓர் கோதையைக் கூட்டி வைக்கக் காரணமாகிறது. மானைக்

கொன்று தனித்து இளைப்பாறுகிறான் ஒரு மலர்ச் சோலையில். மலர் கொய்யவந்து தன் தோழியரைப் பிரிந்து நிற்கும் ஓர் இளமங்கையைக் கண்டு காதல் கொள்கிறான். அவளோடு அளவளாவிக் கூடுகிறான். பின்பு தன்னைத் தேடிவந்த பரிவாரங்களுடன் தன்னூர் திரும்புகிறான். பிரிந்த காதலனை எண்ணி ஏங்குகிறாள் தலைவி. தோழியர் தேற்றத் தன் இல்லம் சேர்கிறாள், தன் மகளின் நிலையுணர்ந்த தாய், தலைவன் சிறப்பை உணர்ந்து தன் மகளைத் தேற்றுகிறாள். அச்சமயம் மங்கையை மணம் பேசத் தூதுவரை அனுப்புகிறான் தலைவன். தாய் மகிழ்வுடன் தலைவன் இல்லத்திற்கு அனுப்பிவைக்கின்றாள். அவளை மணந்து இன்புற்றுப் புதல்வரைப் பெற்று இனிது வாழ்கிறான் தலைவன்.

இவ்வாறு பண்டைக் களவு முறையைப் பெரும்பாலும் பின்பற்றியே கதையமைத்துள்ளார் சுப்பிரதீபக்கவிராயர். இவர் இயற்றியுள்ள 'கூளப்ப நாயக்கன் காதல், இரண்டிரண்டு வரிகளையுடைய 374 கண்ணிகளைக் கொண்ட நூலாகும். இந்நூலின் அமைப்பைத் தழுவிப் பல காதற் பிரபந்தங்கள் தோன்றின. அவை கொங்கு நாட்டைச் சேர்ந்த பழைய கோட்டை நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் மீது வீரபத்திரக் கவிராயர் பாடிய காதல் இராசவல்லி புரத்தில் சிறந்த வள்ளலாயிருந்த முத்துசாமிபிள்ளை மீது அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய முத்துசாமியா பிள்ளை காதற் பிரபந்தம். புறையார் வைரவ நாடார் மீது சரவணப் பெருமாள் கவிராயர் இயற்றிய வைரவ நாடார் காதல். வள்ளல் பெத்தாச்சி செட்டியார் மீது பெரியசாமி சேர்வை இயற்றிய கர்த்திரசமஞ்சரி முதலியன: மற்றும்

கவித்திறனும் கற்பனு சக்தியும் நிறைந்த பாரதியார் பாடியுள்ள 'குயில்' பாட்டும் கவிதை வெறிமூண்ட கனவின் நிகழ்ச்சியாக கூறும் இவ்வகைக் காதற் பிரபந்தமெனவே கூறத்தகும்.

கூளப்ப நாயக்கன் காதல், மக்கள் மனத்தைக் கவர வல்ல எளிய செம்பாகமான நடையுடையது. கவிச் சுவை நிறைந்தது. கவித் திறம் விரவப் பெற்றது. பல கண்ணிகள் திராட்சைக் கனிகளைப் போல் எளிதில் சுவைத்து விடக் கூடியவை. சில தோலுரித்துச் சுவைக்கத் தக்க வாழைக்கனி போன்றன. பலாக்கனிகளைப் பிளந்து சுளைகளைப் பிய்த்து எடுத்துச் சுவைப்பது போன்ற சில கண்ணிகளையும் கொண்டுள்ளது. மற்றைக் காதல்களும் இப்படிப்பட்டனவே. சில கண்ணிகளைக் காண்போம்.

தலைவனுடைய யானை, கொடி தாங்கியுள்ள பகை வீரர்களை நிலத்திலே மோதிச் செய்யும் பேரொலியை ஆசிரியர் அக்கண்ணியின் சந்தத்தின் மூலம் சுவைக்கச் செய்கின்ருர். சண்டையிற் பொருங்கொடித் தலம் தகர்த்து வஞ்சரைக் கைக் கொண்டெடுத்தறைந்துரப்பு கும்ப உக்த குஞ்சரத்தான்

உடைதிரைகள் குமுறு கடல்
ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய
அதிருமொலி மணிமுரசான்

முரசத்தின் ஒலி அதிருகிறது!

தலைவன் வாய்மையிற் சிறந்தவன் என்பதை மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதி நீர் பொய்த்தாலும் சோமரவி பொய்த்தாலும் சொன்ன மொழி பொய்யாதான் என்கிருர்.

தலைவன் கைகளே கற்பக மரத்திற்கும் காமதேனுவுக்கும் மேகத்திற்குங் கொடையைப் பழக்கி வைத்தனவாம். 'அண்டர் தருவுக்கும் அருங்காமதேனுவுக்கும், கொண்டல் தனக்கும் கொடைபயிற்றும் செங்கரத்தான் என்று கைம்மாறு கருதாக் கொடையைப் புகழ்கிறார் கவிராயர்.

தலைமகள் சோலையில் தனித்து மலர் கொய்து கொண்டிருக்கிறாள். அவள் செயல் பொதியாகச் செல்வத்தை வைத்துக் கொண்டு பிச்சைக்குப்போவதைப் போலிருந்ததாம். எவ்வாறெனில் பெண்களின் முகம் கண் மூக்கு காது கை கால்களுக்கு தாமரை முதலியவைகளையே உவமை கூறுவது புலவர் மரபு. எனவே பூக்களைப் போன்ற உறுப்புக்கள் எல்லாம் செம்மையாகப் பூக்கப் பெற்றவள் அப்பூங்கொடி. ஆனாலும் என்ன செய்தாள் ?

"பூவெல்லாம் தன்னிடத்தில்
பூத்திருக்கப் பார்த்திருந்தும்
காவெல்லாம் சென்று சென்று
கால்நோவப் பூவெடுத்தாள்"

என்கிறது வைரவ நாடார் காதல்.

தலைவன் தலைவியைக் காண்கின்றான். தேவ ரம்பையோ? நாக கன்னிகையோ? மண்ணுலக மங்கையோ? என்று ஐயுற்றுக் கண்ணிமைத்தலாலும் மண்ணில் கால் தோய்தலாலும் 'மானிட மங்கையே' என்று தெளிந்து, 'ஊர் எது? இருக்கும் உலகேது? உமது திருப்பேர் ஏது? வார்த்தையொன்று பேசினால் ஆகாதோ?' என்றான். தலைவி வாய் பேசாது காதற் குறிப்புடன் நிற்கிறாள். மீண்டும் தலைவன் அவளை நோக்கி, நீ என்ன தூணு? மயங்கி நிற்கும்

என் மீது உன் மனம் இளகவில்லையா? ஒரு சொல் பேச மாட்டாயா? என்கிறான். அவன் கேட்கும் முறையைப் பார்ப்போம். 'வெள்ளரிக் காயா விரும்புமவரைக் காயா உள்ளமிளகாயா ஒரு பேய்ச் சுரைக்காயா; இதில் வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாய், சுரைக்காய் என்னும் நான்கு காய்களின் பெயர்களே காணப்படுகின்றன. மற்றும் சிலேடைப் பொருள் கருதினால், வெள் அரி-ஒரு காலத்தில் வெண்ணிறத்தோடு' விளங்கிய திருமாலாவர். திருமாலின் பத்து அவதாரங்களில் நரசிங்காவதாரம் தூணிலிருந்து தோன்றியதல்லவா? எனவே தூண் திருமாலுக்குத் தாயாகிறது. ஆகவே, வாய்பேசாது நிற்கும் தலைவியை நீ திருமாலுக்கு தாயாகிய தூணா என்கிறான். மேலும் நீ விரும்புகின்றவர்களைக் (காயா) கோபியாத மனமுடையவளாயிற்றே. என்னிடம் உள்ளம் இளக மாட்டாயா? ஒரு பேச்சாகிலும் உரைக்க மாட்டாயா? என்றும் சிலேடையாகப் பொருள் கொள்ளும்படி அமைந்துள்ள நயம் அறிந்து மகிழ்வதற்குரிய தன்றோ. இக்கருத்துடன் பாட்டைக் கேளுங்கள். வெள் அரிக்கு ஆயா? விரும்புமவரைக் காயாவுள்ளம் இளகாயா ஒரு பேச்சு உரைக்காயா? இது அழகிய சொக்கநாதர் பாடிய காதலில் உள்ளதாகும்.

பின்பு தலைவன் தலைவியைக் கூடிப் பிரிகிறான். பிரிவு ஆற்றாது தலைவி வருந்திக் கண்ணீர் உதிர்க்கின்றாள். இதனைக் கவிராயர் வெளியிடும் கவித்திறமையை நோக்குங்கள்.

காலாயுதக் கொடியோன் கையாயுத விழியாள்
மாலாயுத மீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்.

இங்கு காலாயுதம் கோழியைக் குறிக்கின்றது. அது காலே ஆயுதமாகக் குப்பையைக் கிண்டுகிறதால், கோழி யைக் கொடியாக உடையவன் முருகன், அவன் கை ஆயுதம் வேல் அன்றோ. அவ்வேல் போன்ற விழியி லிருந்தும் திருமாலின் ஆயுதங்களில் ஒன்றாகிய சங்கு ஈனுகின்ற முத்துப் போன்ற கண்ணீரை உதிர்த்தாள் தலைவி. இதனையே, 'காலாயுதக் கொடியோன் கை ஆயுத விழியர்ள், மால்ஆயுதம் ஈன்ற மாமணியைத் தானுதிர்த்தாள் என்கிறார்.

இவ்வாறு வருந்திய தலைவி, தலைவன் ஊருக்காவது செல்வோம் என்று நினைக்கிறாள். தலைவன் தன்னூர் 'ஒன்பதூர்' என்றது நினைவுக்கு வருகிறது.

பேரூர் வழியே நாம் பின் தொடர்வோம் என்றாலும்
ஓர் ஊர் என்றானிலையே ஒன்பதூர் என்றானே.

என்று கவலைப்படுகிறாள். தலைவனது ஊர் நவபுரி. இதுவே இங்கு ஒன்பதூர் என்று வைத்து அழகுபடுத் தப்பட்டுள்ளது.

கன்னிவாடி ஜமீன்தார் காதலில் தலைவி கூறுவ தாக வருவதும் கேட்கத் தக்கது.

ஆடு மயில் வாகனமே ஆரணங்கே பூவை கன்னி!
வாடி என்று சொன்னானே வாழூமூர் சொல்லலையே.

'கன்னி வாடி' என்று தானே சொன்னார். ஊரைச் சொல்லவில்லையே என்று வருந்துகிறாள்.

இவ்வாறு சொல்லிலும் பொருளிலும் இன்பச் சுவையூறும் காதற் பிரபந்தங்களைத் தமிழர் விரும்பு வதில் வியப்பில்லையே.

# 6. பள்ளு

தமிழ் இலக்கியத்தில் தொண்ணூற்ருறு வகை பிரபந்தங்கள் இருக்கின்றனவென்று கூறுப்படுகின்றது. பிரபந்தம் என்பவை செய்யுளால் ஆக்கப்பட்ட கட்டுரைகள். அதைப் பெரும் பிரபந்தங்கள் என்றும் சில்லரைப் பிரபந்தங்களென்றும் இரு வகையாகப் பிரித்துக் கூறுகிருர்கள்.

அரசர்கள், படை வீரர்கள், அரசருக்கு ஒப்பாகக் கருதப்படும் தனவந்தர்கள் இவர்களிடையே நிகழும் சம்பவங்களேயும், செய்கைகளேயும் உணர்ச்சிகளேயும் பற்றி அரிய சொற்களால் ஆழ்ந்த கருத்துடன், பல்வேறு வகைப்பட்ட ரசங்கள் பொருந்த அமைக்கப்பட்டவை பெரும் பிரபந்தங்கள். ஆனல் சாதாரண நாட்டு மக்கள் அவற்றின் இன்பங்களே அறிந்து அனுபவிக்க முடியாது. அதற்குரிய கல்விப் பயிற்சி அவர்களிடம் இல்லே. ஆகையால் பிற்காலத்தில் எளிய பாமர மக்களின் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டும், இலக்கியப் பயிற்சி உள்ளவர்களும் இல்லாதவர்களும் ஒருங்கே உணர்ந்து இன்புறுமாறு வழக்கச் சொற்களே மிகுதியாகக் கொண்டும், இசையுடன் கூட்டிப் பாடுவதற்கும் ஆடுவதற்கும் ஏற்றதாய்ச் சில பிரபந்தங்கள் இயற்றப்பட்டன. அவைகளுக்கு சில்லரைப் பிரபந்தங்கள் எனப் பெயர் வழங்குகின்றது. குறவஞ்சி, நொண்டி நாடகம், பள்ளு என்பவைகள் பாமர மக்களால் மிகவும் விரும்பப்படும் சில்லரைப் பிரபந்தங்கள்.

இம்மூவகைச் சில்லரைப் பிரபந்தங்களும் 17 வது நூற்ருண்டுகளுக்கு முன்பு வழங்கி வந்ததாக

அறிவதற்கு யாதொரு சான்றும் தெரியவில்லை. 18, 19-வது நூற்றுண்டுகளில் இம்மாதிரி நூல்கள் அதிகமாக ஏற்பட்டன. சிவபெருமான், திருமால், விநாயகர், முருகன் அடியார்கள், பேருபகாரிகள் இவர்களைப் புகழ்ந்து புலவர்கள் இப்பிரபந்தங்களைச் செய்தார்கள். இவற்றில் குறவஞ்சி, பள்ளு என்னும் பிரபந்தங்களை எந்தத் தலத்துத் தெய்வங்களைப் பற்றி அவை இயற்றப் பட்டிருக்கின்றனவோ அந்தத் தலத்துத் திருவிழாக் காலங்களில், பாடி நடிக்கும் வழக்கம் இன்னும் சில முக்கிய தலங்களில் இருந்து வருகின்றது.

பள்ளுப் பிரபந்தத்திற்குப் புலவர்களால் எடுத்துக் கையாளப்பட்ட விஷயம் உழவர்களின் வாழ்க்கை, பல் வேறு வகுப்பினர் உழவுத் தொழிலை நடத்தி வந்த போதிலும், பள்ளர்கள் எனக் கூறப்படும் சாதியினர், ஆண் பெண் அடங்கலாக எல்லோரும் அத்தொழிலில் முற்றிலும் ஈடுபட்டு வருவதால் அவர்களின் வாழ்க்கையையும், தொழிலையும், உணர்ச்சிகளையும் பொருளாகக் கொண்டு செய்யப்பட்ட இந்நூல்களுக்குப் பள்ளு என்று பெயர் வழங்கலாயிற்று. இந்தப் பள்ளு நாடகம் நடைபெறும் இடம், இந்தப் பிரபந்தத்தால் பாடப்பெற்றிருக்கும் தெய்வம் கோவில்கொண்டிக்கும் ஊர். இந்த நாடகத்தின் முக்கிய பாத்திரங்கள் பண்ணைக்காரன், பண்ணைப் பள்ளனாகிய குடும்பன், அவனுடைய மூத்த மனைவி, இளையமனைவி, ஆகிய இவர்கள். இதைத் தவிர ஊரில் உள்ள இதர பள்ளர்களும் பள்ளியர்களும் கலந்துகொள்வார்கள். மூத்தமனைவி உள்ளூர்க்காரியாயிருந்துகொண்டு உள்ளூர்த்தெய்வத்தை வணங்குவாள்.

இளையவள் வேற்றூராள். வேறு தெய்வத்தை வணங்கு பவள். மூத்தாள் தெய்வம் சிவனாயிருந்தால் இளையாள் தெய்வம் திருமாலாயிருக்கும். மூத்தாள் தெய்வம் முருகனாக இருந்தால் மற்றொருத்தியின் தெய்வம் பரம சிவனாயிருக்கும்.

நம் நாட்டு இதர இலக்கிய நூல்கட்கொப்ப இந் நூலும் காப்புச் செய்யுள், கடவுள் வாழ்த்துக்களுடன் தொடங்குகிறது. மூத்த பள்ளியையும், இளைய பள்ளி யையும் அவர்களின் காதலன் குடும்பனையும் முறையே வரவழைத்து நம் முன்னிறுத்தி கவிஞர் நாடகத்தை ஆரம்பிக்கிறார். இரு பள்ளியர்களின் உருவமும் வனப் பும் நன்கு வர்ணிக்கப்பட்டவுடன், இறுக்கிய கச்சையும், முறுக்கிய மீசையும், சொருகிய கொண்டையும், உரு மால் அணிந்த தோளுடனும், கையில் தடியைச் சுழற் றிக் கொண்டு மது வெறியால் சிரித்த முகத்துடன் அழகிய இளங் காளைக் கொப்ப நம்முன் நிற்கிறான் குடும்பன். இம்மூவரும் தாங்கள் இன்னார் என்று பெருமையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். உடனே பள்ளியர் இருவரும் மாறி மாறித் தங்கள் தங் கள் நாட்டு வளத்தைப் பற்றியும் ஊர் வளத்தைப் பற்றியும் பாடி, தங்கள் தொழில் நடத்துவதற்கு இன்றியமையாத காரணமாகிய மழையை வருவிக்கக் குயிலைக் கூவுமாறு தங்கள் குயில் மொழியால் இருவரும் கூப்பிடுகிறார்கள். பிறகு சேரியில் உள்ள எல்லோரு மாகச் சேர்ந்து மழை பெய்விக்குமாறு தெய்வத்தைப் பரவுகின்றார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க வானத்தில் மழைக்குறி தோன்றுகின்றது.

ஆற்று வெள்ளம் நாளை வரத்தோன்றுதே குறி-மலையாள
மின்னல் ஈழ மின்னல் சூழ மின்னுதே.
நேற்று மின்னும் கொம்பு சுற்றி காற்றடிக்குதே-கேணி
நீர்ப்படு சொறித்த வளை கூற்றிடுகுதே.
சேற்று நண்டு சேற்றில் வளை ஏற்றடைக்குதே-மழை
தேடி யொரு கோடி வானம் பாடியாடுதே.
போற்று திருமாலழகற்கேற்ற மாம் பண்ணைச்-சேரி
புள்ளிப் பள்ளர் கூடிப் பாடித்துள்ளிக்-கொள்வோமே.
கொங்குமின்னல் ஈழ மின்னல் எங்கும் மின்னுதே-கருங்
குயிலொளிக்க மஞ்சள்நிற வெயிலெறிக்குது.
கங்கந்திரண்டே யொலிக்குதங்கள் விசும்பில்-வரக்
கண்டோம் வெள்ளைப் பூச்சியும் கும்பிடு நாச்சியும்.
மங்களமாய்த் திங்கள் தோறும் எங்கும் மும்மாரி-பெய்ய
வட்டமாக மொட்டைச் சிந்தா வெட்டுது புல்லை.
எங்கள் திருமலைக்கந்தர் பொங்கலினால்-பொய்யா
தின்னு நாளைப் பெய்யும் மழை நன்று பள்ளரே.

ஆற்றில் வெள்ளம் வருவதினால் ஏற்படக்கூடிய இன்னல்களை அகற்றப் பள்ளர்கள் முன்கூடியே தயாராகின்றனர். மழை கொட்டுகின்றது. குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐவகை நிலங்களிலும் நீர் நிரம்பி ஆறுகளில் வெள்ளம் புரண்டோடுகின்றது. ஊரெங்கும் நீர் நிரம்பவே நிலங்களைப் பயிர் செய்வதற்கான முயற்சிகள் செய்யப் பள்ளனைத் தேடி வருகின்றான் பண்ணைக்காரன். இவன் இந் நாடகத்தில் ஒரு முக்கியமான பாத்திரம். பண்ணைக்காரனின் உருவமும் செய்கையும், விசித்திரமானவை. பெரும் நாடகங்களிலுள்ள விதூஷகனின் பங்கை இந் நாடகத்தில் பண்ணைக்காரன் நிரப்புகிறான். பருத்த தொந்தியும் சிறுத்த வழுக்கைத் தலையும், ஈ அரித்த

வாயும், கொசுகு மொய்க்கும் கண்களும், ஐந்தாறு மயிர்களுடன் கூடிய மீசையும் இவ்வுருவுடன் தடி ஊன்றிக் கொண்டு ஒரு கையில் நெருப்புப் பற்றவைக் காத சுருட்டையும் பற்றிக் கொண்டு பள்ளன் வீட் டண்டை வந்து நிற்கிருன் பண்ணைக்காரன். "ஒட்டக மும் இவரால் நல்ல கட்டழகு பெற்றது" எனக் கூறு கிருர் புலவர். இவரைக் கண்டதும் பள்ளர்கள் கும்பிடு கிருர்கள். முன்னுல் பள்ளிகளிருவரும் தென்படு கிருர்கள். மூத்த பள்ளியை நோக்கி சேலயும் வள வயலில் ஏர் நடத்தும் காலம்,

செறிந்த குளம் காலணைகள் சீர்படுத்துங்காலம்
சாலி விதை தொளி கலக்கிப் பரவு தெளிகாலம்
சனங்கள் அதிகா லயெழுந்தாளேவும் காலம்
காற்புரவும் குளப்புரவும் பயிரேற்றுங்காலம்
கரும்பரம்பைப் பருவம் பார்ந்திதம்புரியுங் காலம்
நாற்புவியில் இரண்டு செய்யும் சீர்படுத்தும் காலம்
நமக்கிரண்டு செயும் குடும்பன் முளைத்தகலிகாலம்.

என்று சொல்லிப் பள்ளனை வரச் சொல்லடி என்கிருன். தன் மனக் குறைப்பாட்டை வெளியிட இதுதான் தருணமென்றெண்ணி, பள்ளன், பண்ணை பட்டடையி லுள்ள நெல்லெல்லாம் வாரி விட்டு, மாமிக்குக் கண் டாங்கிச் சேலை வாங்கி யுடுத்தும், கள்ளைக் குடித்துக் கொண்டும், இளையவள் மயக்கத்திலிருந்து கொண்டு, மாடு கன்றுகளைக் கவனித்து உழவு வேலைகள் ஒன்றும் செய்யாமல், அடக்குவாரின்றித் திரிகின்றுன் என்று மூத்த பள்ளி முறையிட்டு, இளையாளைக் கேளும் அவள் உள்ளத்தைச் சொல்லுவாள் என்கிருள். உடனே பண்ணைக்காரன் இளையவள் பக்கம் திரும்பிப் பள்ளன் எங்கே என்கிருர். அதற்கவள், மூன்று

நாளைக்கு முன் அதிகாலையில் துளிக்கஞ்சி வார்த்து மூத்த பள்ளி அவனை வேலைக்கு அனுப்பியதாகவும், போனவன் ஆற்று வெள்ளம் முதலிய எந்த ஆபத்தில் சிக்கிக் கொண்டானோ இன்னும் திரும்பி வரக் காண வில்லை யென்றும், அவன் போனது முதல் இரவெல் லாம் தனக்குத் தூக்கமில்லை என்றும் நல்ல படியாகத் திரும்பி வர வேண்டுமே என்று தான் தெய்வத்தை வேண்டிக் கொண்டிருக்கிறாள் என்றும் சொல்லிச் சாலம் செய்கிறாள். இரண்டு பள்ளிகளின் கூற்றையும் கேட்டு அனுபவிக்க பண்ணைக்காரன் பள்ளன் வீட்டில் தான் உள்ளான் என ஊகித்து அவனை வெளிக் கிளப்ப எண்ணி 'நீ பொய் சொல்லுகிறாய். உன்னைச் சவுக்கால் அடிப்பேன்' என்று சொல்லி இளைய பள்ளியை நோக்கிச் சொல்லுகிறான். தன்னழகியைப் பிறர் ஒறுக்கப் பொறாத பள்ளன் அதனை நீக்குமாறு உடனே உள் ளிருந்து வெளிவருகிறான். அவனைக் கண்டு பண்ணைக் காரன், மாடு, ஏர் வித்து முதலியவைகளின் இருப்பும், வரவும், செலவும் கூறும்படி கேட்கிறான். அவைகள் ஒன்றும் பாக்கி இல்லை என்று பொருள் படும்படி சிலேடையாகப் பள்ளன் பதிலுரைக்கிறான். பண்ணைக் காரனுக்குக் கோபம் வருகின்றது. அதைப் பொறுத் துக் கொண்டு நிலங்களுக்கு உரம் இடவேண்டி இளைய வளைக் கூப்பிட்டு ஆட்டுக்கிடை வைக்கும்படி ஏவு கின்றார். பள்ளனும் அப்படியே செய்து வித்து இளை யாளுடன் இருக்கிறான். இதனைக் கண்டு மனம் பொறாத மூத்தாள் பண்ணைக்காரனிடம் சென்று பள்ளன் இளையாள் மோகத்திலேயே இருந்து கொண்டு பண்ணை விஷயங்களைக் கவனியாமல் ஆட்டுக்கிடை

வைக்கப் போனவன் இளையாள் வீட்டுக்கிடையாக இருக்கின்றான் என்றும் தன் பேச்சு அவனிடம் ஏற வில்லை என்றும் அவனைக் குட்டை மரத்திலிட்டுத் தண்டித்தாலொழிய வழிக்கு வரான் என்றும் முறை யிடுகின்றாள். ஏற்கெனவே பள்ளன் பேரில் மனம் குமுறிக் கொண்டிருந்த பண்ணைக்காரன் மூத்தாள் இதைச் சொன்னவுடன் பள்ளனை இட்டு வரச் செய்து அவனைக் குட்டை மரத்திலிடுகிறார். இதனால் பள்ளன் மிகவும் மனம் நோகிறான். அந்த நிலையில் முதலில் இளையவள் இவனைக்கண்டு வருந்தி இது மூத்தவளின் சூழ்ச்சியால் ஏற்பட்டதெனச் சக்களத்தியின் பேரில் குறை சொல்லுகிறாள். பள்ளன் அவள் மனதைத் தேற்றி, மூத்தவள் வருவாள், நீ இங்கிருந்து அவளுடன் சண்டை யிடாதே போய்வா என்று அனுப்பி விடு கிறான். அவள் சென்றபின் மூத்தபள்ளி, ஒரு கலயத் தில் சோற்றை எடுத்துக் கொண்டு, பள்ளனிடம் வந்து தன்னுடைய அண்ணன், அனுப்பிய சோற்றை, பள் ளன் இல்லாமல் தான் உண்ண மனமில்லாதவளாய்க் கொண்டு வந்ததாகச் சொல்லித் தன் பேச்சைக் கேளாமல் இளைய பள்ளியின் வலையில் சிக்கிக் கொண்டி ருந்ததின் பலன் இப்படிச் சிறையில் வந்து வாய்த்தது என்று ஒன்றுந் தெரியாதவள் போல் கூறிக்கூடவிருந்து வருந்துகிறாள். இனி மிஞ்சிப்போன காரியத்தைப் பற்றி வருந்துவதில் பயனில்லை என்று பள்ளன் சொல்லி, பண்ணையாரிடம் சென்று தன்னை மீட்டு வரும்படி அவளைக் கேட்டுக் கொள்கிறான். அதற்கவள் இளையவ ளின் வார்த்தைக்கு இருக்கும் மதிப்பு பண்ணைக்கார

னிடம் தனக்கிருக்காது, தன்னால் என்ன செய்ய முடியும் என்று பதிலுரைக்க, இனிமேல் அவள் சொல்வதையே கேட்டுக்கொண்டு அவள் வார்த்த கஞ்சியைக் குடித்துக் கொண்டு அவளண்டையே இருந்து வருவதாக உறுதி கூறித் தனக்கு வந்த அவமானம் அவளுக்கும் இல்லையா என்று சொல்லி அவள் மனதை இளகப் பண்ணுகிறான். மூத்த பள்ளி அவன் பேச்சுக் கிணங்கியவளாய் எழுந்து சென்று பண்ணைக்காரனிடம் பிழை பொறுக்க வேண்டும் என்று பணிந்து குடும்பனைக் குட்டை மரத்தினின்றும் விடுவிக்கின்றாள்.

விடுவிக்கப்பட்ட பள்ளன் விதம் விதமான நெல் வித்துக்களும், விசித்திரமான பெயர்களையுடைய ஆயிரம் உழவுமாடுகளும், அதற்கேற்றபடி, ஏர், மேழி, நுகம், பரம்பு, வடக்கயிறு இவைகள் ஆயிரக்கணக்கில் இருப்பதாகவும், உண்மைக் கணக்குக் கூறிப் பண்ணைக் காரனிடம் நல்லேர் கட்டி உழுவதற்கு முகூர்த்தம் பார்த்து, கூடவிருந்து ஏர் கட்டுவிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றான். பண்ணைக்காரன் நாள் குறிக்கக் குடும்பன் அன்று பொன்னேர் பூட்டுகின்றான். நாத்தங்கால் உழுகையில் மாடொன்று முட்டி அவனைக் கீழே தள்ளுகின்றது. அலறிக்கொண்டு இரு பள்ளிகளும் அவனண்டை வருகின்றனர். மதயானையையும் பிடிக்கும் வலியுடையான் கீழே விழ நேர்ந்தது சக்களத்தியின் புலை மருந்தின் வெறி என்கிறாள் மூத்தவள். மூத்தவள் பார்த்துச் சிரிக்க விழுந்து விட்டாயே எழுந்திரு எனத்தேற்றுகிறாள் இளையவள், உடனே குடும்பன் தோள் குலுக்கி உதறி யெழுந்து பாக்கி உழவையும் முடித்து விதைகள்

தெளிக்கின்றான். இட்ட விதை உரமாய் முளைத்து நாற்றாகின்றது. நட வேண்டிய நிலங்களை உழுது சீர் செய்து பண்ணைக்காரனுக்குத் தெரிவித்து ஊரிலுள்ள ஏராளமான பள்ளியர்களை அழைத்துக் கொண்டு வந்து நாற்றைப் பிடுங்கி வயல்களில் நடுகின்றான். நடும் பொழுது குரவை பாடிக்கொண்டு பள்ளியர் நடுகின்றார் கள். அப்பொழுது பள்ளிச்சிறுவர் சிறுமியர்களின் செய்கைகளைக் கூறி வம்பளந்து கொண்டே நடுகிறார்கள். அங்கு ஏற்படும் சரசப் பேச்சுகளையும் விளையாட்டுகளை யும் பற்றி விரிவாகவும் ரசமாகவும் பாடி இருக்கின்றனர் புலவர்கள். நட்ட பயிர் நன்றாய் விளைகின்றது, பண் ணைக்காரர் சொற்படி நல்ல நாளில் கதிரறுத்து கோயிலில் சேர்ப்பித்து, பின் பள்ளரெல்லாம் கூடி அறுவடை செய்து கதிர்களைப் போரிட்டுப் பிறகு கடாவிட்டு நெற் போராக்குகின்றார்கள். கண்டு முதல் நெல்லில் ஈசன் ஆடித் திருநாளுக்கும் பங்குனித் திருநாளுக்கும், மண் டகப்படிக்கும், தினப்பூசைக்கும், நாவாணற்கும், மறை யோர்க்கும் ஆயிரம் ஆயிரமாகக் கோட்டைகளை தனியே ஒதுக்குகிறார்கள், பாக்கி நெல்லைக் கணக்கிட முடி யாமல் விதைகளுடன் சேர்த்துச் சேராகக் கட்டி வைக் கிறான் பள்ளன்.

இனித் தனக்கு ஏற்பட்ட நெல்லையும் தான் திருடி வைத்த நெல்லையும் கூட்டி இரு மனைவியர்க்கும் பங் கிட்டுக் கொடுக்கிறான் குடும்பன். நல்ல நெல்லாக இளைய வளுக்குத் தந்து கல்லுடனும் மண்ணுடனும் கருக்கா யுடனும் கூடிய நெல்லை மூத்தவளுக்கு காலால் ஒதுக்கு கின்றான். தனக்குரியபடி பங்கு வேண்டும் என்று மூத் தாள் கேட்கப் பள்ளன் கையை விரிக்கின்றான்.

அதனால் சீற்றங் கொண்டு மூத்தப் பள்ளி அங்கு கூடி யிருந்த பள்ளர்களிடையே வைப்புக் கூத்தியான இளைய வளுக்குப் பங்கு ஏதெனச் சொல்லி இளைய பள்ளியுடன் சண்டை பிடிக்கின்றாள். இருவரும் ஒருவரையொருவர் ஏசிக் கொள்ளுகிறார்கள். ஒருத்தி ஏச்சுக்கு மற்றவள் ஏச்சுக் குறைந்ததாகக் காணப்படவில்லை. ஒருவர் மற் றொருவரைப்பற்றிக் கூறும் ஏச்சுக்கு உள்ள விஷயங்கள் பூராவும் தீர்ந்துபோக அப்பவும் சண்டையை நிறுத்தா மல் அவரவர்கள் வணங்கும் தெய்வத்தைப்பற்றி ஏச ஆரம்பித்துச் சண்டையைத் தொடர்ந்து நடத்துகிறார் கள். அதில் இரு தெய்வங்களின் செய்கையையும் திரு விளையாடல்களும் முறையே இருவர்களாலும் ஏச்சாக எடுத்துக் கூறப்படுகின்றது. கடைசியில் சண்டையை ஒருவாறு முடிக்கக் கருதி மூத்தவள் இளையவளை நோக்கி தான் வணங்கும் தெய்வத்தை வணங்குபவனுக்குப் பெண்டாயிருந்தும் அந்தத் தெய்வத்தை அழித்துப் பேசலாமோடி என்கிறாள். அதற்கவள் கோபம் வந் தால் சொல்லாமலிருப்பார்களா என்கிறாள். சினத்தா லும் சிரமழியச் சொல்லலாமோடி என்கிறாள் மூத்தவள். முந்த வைதவரை வாழ்த்தினவர்கள் வையகத்துண் டோ என்கிறாள் இளையவள். அதற்கு மூத்தவள் முந்த வைதாலும் பெரியவாள், சின்னவாள் இல்லையா என் கிறாள். இதை முந்தச்சொன்னால் சண்டை இத்தனை யுண்டோ? எனக்குப் புத்தியில்லையோ என்கிறாள் இளை யவள். சொன்னால் என்ன நீயும் பொறு, நானும் பொறுத்தேன் என்று முதற் பள்ளி கூறி இருவரும் சமாதானமாகிக் கடவுளை வாழ்த்திக் குடும்பனுடன் ஒற் றுமையாய் இருந்து வருகிறார்கள்.

---

# 7. ஆற்றுப் படை

காப்பியங்கள் சிறு காப்பியம் எனவும் பெருங் காப்பியம் எனவும் இருவகைப்படும். இச்சிறு காப்பியங்கள் சில்லரைப் பிரபந்துங்கள் எனவும் பெயர் பெறும். ஒரு சார் இலக்கண நூலோர் இவற்றை வகைப்படுத்துங்கால் தொண்ணூற்ருறென்று கணக்கிட்டுள்ளார். மடல், உலா, பிள்ளைத் தமிழ், கலம்பகம், அந்தாதி, கோவை, தசாங்கம், ஊசல், இரட்டை மணிமாலை, மெய்க் கீர்த்தி, ஆற்றுப்படை, பரணி முதலியன இத்தொண்ணூற்ருறு வகைச் சில்லரைப் பிரபந்தத்தில் அடங்கும்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருட்பேறுகளுள் நான்கையும் பற்றிக் கூருது எவையேனும் மூன்று அல்லது இரண்டு அல்லது ஏதேனும் ஒன்றைப் பற்றிக் கூறுவது சில்லரைப் பிரபந்தங்களின் பொது இலக்கணமாகும். இத்தகைய சிற்றிலக்கியம் பேரிலக்கியம் என்ற வகுப்புப் பிற்காலத்து எழுந்த தொன்ருகும். தண்டியாசிரியர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் இப் பிரிவு வகைகளைப் போற்றியுள்ளார்கள். பண்டை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலோ, இத்தகைய பிரிவு இல்லை. அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து இயைபு, புலன், இழைபு ஆகிய பிரிவுகளே பண்டை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பேசப்படுகின்றன. இவற்றுள், விருந்து என்பதற்கு இலக்கணம் கூறுங்கால் 'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்று இலக்கணம் காணப்படுகின்றது. பழங்கதை மேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படும் பல்வகை நூல் யாப்புகளையும் உணர்த்தும்

எனப் பொருள் கண்டு, அந்தாதி கலம்பகம் முதலாய பலவும் இதனுள் அடங்கும் என்றும் உரையாசிரியர்கள் இவ்விருந்து என்ற தலைப்பை விளக்கியுள்ளார்கள். ஆதலால் இத்தொண்ணூற்ருறு வகைச் சில்லரைப் பிரபந்தங்களும் இவ்விருந்து என்ற நூல் யாப்பினுள் அடங்கும்.

இனி, அவற்றுள் ஒன்ருகும் இவ்வாற்றுப் படை என்பது இதுவாம் என்பதை ஆராய்வோம்:---

ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெருஅர்க்கு அறிவு றீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்

என்பது தொல்காப்பியம்.

இதற்கு இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியில் நிற்றல் நன்றென்றும், கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினுலே தான் இறைவனிடத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை எங்கும் திரிந்து பெருதவர்களுக்கு இன்னவிடத்தே சென்ருல் பெறலாம் என்று அறிவுறுத்தி அவரும் அங்கே சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்ன கூறுபாடும் என்பது பிண்டப் பொருள். இங்கு கந்தழி என்பது பற்றழிந்த தன்மை என்பதை யுணர்த்தும். இங்ஙனம் ‘சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்’ என்று சொன்ன மிகையினுலே ஆற்றுப் படுத்துதலாகிய துறையில் வழங்கும் கூத்தராற்றுப் படை, பாணுற்றுப் படை, பொருநராற்றுப் படை, விறலியாற்றுப் படை, முருகாற்றுப் படை முதலிய பெயர்களால் வழங்கும் நூல்களும் உடன் கொள்ளப்படும் என்றும் நச்சினுர்க்கினியர் முதலியோர் உரை கண்டுள்ளார்கள்.

இவற்றால், ஆற்றுப்படை என்பது பொதுவாய்க் கூத்தர் முதலியவர்களுள் ஒருவர் கொடையாளியான ஒருவரிடத்துத் தாம் பெற்ற செல்வத்தை எதிர்வந்து இரப்போருக்கு உணர்த்தி, அவரும் அந்தக் கொடையாளனிடத்துத் தாம் பெற்றது போலவே பொருளைப் பெறுமாறு வழிப்படுத்துவது என்பது இலக்கணம் எனக் கொள்ளக் கிடக்கின்றது. பொருளிலக்கணத்துள், புறப் பொருளில் ஒரு துறையாய் இவ்வாற்றுப்படையென்பது பாராட்டப்படுகின்றது.

இவ்வுலகில், ஒவ்வொருவரும் தாம் பெற்ற பெருவளத்தை இரவலருக்கு அறிவுறுத்தி வழிப்படுத்துதற்கு அதாவது ஆற்றுப் படுத்துதற்கு உரியவராயினும், பாண் பொருநர், விறலியர், கூத்தர் முதலியவர்களை ஆற்றுப் படுத்துவதாகச் செய்யுள் செய்வது கவிமரபாயமைந்துள்ளது. பத்துப்பாட்டு என்ற சங்க நூலில் பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, ஆகிய பலஆற்றுப்படைகள் அமைந்திருத்தல் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைப்பில் கொள்ளத் தகும். இவ்வொவ்வொரு தலைப்பும் பொருநனை ஆற்றுப்படுத்துதல், பாணனை ஆற்றுப்படுத்துதல், கூத்தனை ஆற்றுப்படுத்துதல். என இரண்டாம் வேற்றுமைத் தொகையாய்ப் பொருள்படும். இனி ஒரு சாரார், பொருநர், பாணர், கூத்தர், விறலியர் முதலியோரைத் தாம் பெற்ற செல்வத்தை அறிவுறுத்தி, வழிப்படுத்துதற்கு (ஆற்றுப்படுத்துவதற்கு) உரியவர் முறையே பொருநர், பாணர், கூத்தர் விறலியர் என்ற தகுதியுடையவரே எனக்கூற முன்வருவாருமாவர், அங்ஙனம் உறுதியாய்க் கொள்வதற்கு நூல்களிலோ பண்டை இலக்கண

அமைதிகளிலோ இடம் பெரிதும் இல்லை; ஆற்றுப்படுத்துவோர் இன்னாராகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதியில்லை. ஆற்றுப் படுத்தப்படுவோர் தரம் பற்றியே அவ்வாற்றுப்படை பொருநராற்றுப் படை என்றும் கூத்தராற்றுப் படையென்றும், பாணாற்றுப்படை யென்றும், விறலியாற்றுப்படை யென்றும் நூல்கள் பெயர் வழங்கப்படுதல் நாம் காண்போம்.

பொருநர் என்போர் ஏர்க்களம்பாடுவோர் போர்க்களம்பாடுவோர் பரணி பாடுவோர் எனப் பலராவார் இத்திறத்தவரைப் பரிசில் பெற்றார் ஒருவர் பரிசில் அளித்த செல்வந்தனிடத்து ஆற்றுப் படுத்துவது என்பது பொருநராற்றுப்படை என்பதன் விளக்கமாகும். இது போலவே பாணர், கூத்தர், விறலியர் இவர்களை ஆற்றுப் படுத்துவது முறையே பாணாற்றுப்படை கூத்தராற்றுப் படை, விறலி யாற்றுப்படை எனப் பெயர்பெறும். பாணர் என்பார் யாழ்ப்பாணர் மண்டைப்பாணர் என இருதிறப்படுவோர். இவர்களுள் பத்துப் பாட்டில் வரும் சிறுபாண் ஆற்றுப்படை பெரும் பாணாற்றுப்படை இரண்டிலும் காணப்படும் பாணர் யாழ்ப்பாணர்களாவார். யாழ்ப்பாணராவார் யாழைச் சுமந்து பாடுவோர். இச்சந்தர்ப்பத்து மற்றொரு செய்தியும் உடன் ஒரு சிறிது ஆராய்தல் பெரிதும் பொருத்தமுடையது. ஒரு சாரார் சீறியாழைச் சுமந்து நின்ற காரணம் கருதி, சிறு பாணாற்றுப்படை யென்றும் பேரியாழைச் சுமந்து நின்ற காரணத்தால் பெரும் பாணாற்றுப்படை யென்றும் பெயர் இரண்டு நூல்களுக்கு வந்ததாகக் காரணம் காட்டுவர். இக்கருத்து அத்துணை சிறவாது. ஒரே நூலில் இரண்டு பாணாற்றுப்

படைகள் வந்ததால், ஒன்றை மற்றொன்றினின்றும் வேறு படுத்து அறிதற்கு 'சிறிய' 'பெரிய' என்ற அடை மொழிகள் அளிக்கப்பட்டன என்றே கொள்ளவேண்டும். இங்ஙனம் வேறுபடுத்து அடை மொழிகளால் காட்டுவது தமிழர் வழக்கு என்பதை 'நெடிலடி' 'கழிநெடிலடி' என்ற செய்யுளியலில் வரும் தலைப்புக்களாலும், 'குறுந்தொகை' 'நெடுந்தொகை' என்றாற் போன்ற நூல் பெயர்களாலும் நாம் நன்கு அறியலாம். மற்றும் 'பாணாற்றுப்படை' என்பதொன்றன்றிச் சிறு பாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படையென்ற ஒரு பிரிவு உண்மையில் இருப்பின், இத்தலைப்புக்கள் தமிழில் வேறு எங்கேனும் எடுத்து ஆளப்பட்டிருக்க வேண்டும். மேலும், சீறியாழ், பேரியாழ் என்ற பாணன் சுமந்த யாழினது சிறுமை பெருமைகளால் இப் பெயர்கள் அமைந்தனவாகக் கொண்டால், உண்மையில் சீறியாழ்ப் பாணாற்றுப்படை, பேரியாழ்ப் பாணாற்றுப்படை என்ற பெயர்கள் வழங்கப்பட வேண்டும். அங்ஙனம் அமையாமையே, இப் பொருள் சிறவாமையை நன்கு அறிவிக்கும்.

நிற்க, இதுவரை பொருநராற்றுப்படை, பாணாற்றுப்படை என்ற நூல்களின் பொருள்களை ஒருவகை ஆராய்ந்தோம், இனி, விறலியாற்றுப்படை யென்பது பாடுகின்றவள், பெண்பாலொருத்தியை ஆற்றுப்படுத்தியதாகப் பொருள் கொண்டு விளங்குவது ஒரு நூலாகும், இங்ஙனம் பேசப்பட்ட சில ஆற்றுப்படைகளன்றி வேறு சில வகைகளும் காணப்படும். அவற்றுள் முருகாற்றுப்படை என்பதும் ஒன்று. இது சாலச் சிறந்த

தொரு நூலாகும். முருகனிடத்து அவனருட் செல்வம் பெற்ருெருவன் பெறச் சமைந்து நின்ருெருவனை ஆற்றுப்படுத்தியது என்பது இந் நூலின் பொருளாகும். இங்கு ஏழாம் வேற்றுமையுருபு தொக்குநின்ற தாகக் கொள்ளப்படும். இதன் சிறப்பு நோக்கி இது திருமுரு காற்றுப்படை என்று அடை கொடுத்தும் போற்றப் படும். பத்துப் பாட்டில் முதற் கண் நின்று இலங்குவ தொரு தெய்விகம் செறிந்த நூலாகும் இது. இதன் பெருமையை இறுதியில் இன்னும் சிறிது விஸ்தாரமாகக் காண்போம்.

இனிப் புது முறையில், புலவராற்றுப்படை என்ற தொரு நூல் உளதென்றும், அது புலவனை ஆற்றுப் படுத்துவது எனப் பொருள்படும் என்றும் கொண்டு அத்துறையில் சில நூல்கள் செய்தார்களும் உளர்.

நிற்க, பத்துப் பாட்டு என்ற நூலில் காணப்படும் இவ்வாற்றுப்படை நூல்களன்றி, தனிச் செய்யுட்களாக புறம் முதலிய நூல்களிலும் சில செய்யுட்கள் பல புலவர் பெரியோர்களால் இயற்றப்பட்டனவாகக் காணப்படுகின்றன. மேலும், பேரிலக்கியங்களிலும் இவ்வாற்றுப்படை துறை சார்பில் சில பல செய்யுட்கள் பயின்றிருப்பதும் ஊகித்தறியத்தகும். தொண்ணூற் ருறு வகைச் சில்லரைப் பிரபந்தங்கள் இருப்பினும், அவற்றுள் ஒரு சிலவே பெரிதும் பயில்வன; சொற் சுவை பொருட்சுவை மலிந்தன. கலம்பகம், பிள்ளைத் தமிழ், ஆற்றுப்படை பரணி இவ்வரிசையில் வைத்து எண்ணத்தகும். இவற்றுள்ளும் ஆற்றுப்படை மிக வும் சிறந்ததொன்ருகும். இதுபற்றியே யன்றே பத்துப் பாட்டில் செம்பாதி இவ்வாற்றுப்

படை நூல்களாகச் சேர்ந்திலங்க நாம் காண்போம். சொற்பொருட் போக்கில் ஏறு போன்ற பீடு நடையுடைய நூல் இஃதொன்றே எனக் கூறுதல் மிகையாகாது.

உதாரணமாக, திருமுருகாற்றுப்படையில், முருகனிடத்தில் ஆற்றுப்படுத்தும் நிலையில், அம்முருகனைச் சின்னஞ் சிறு சொற்களால் அரும்பெருங் கருத்துக்கள் செறிய ஆசிரியர் நக்கீரர் விரித்துள்ள இடத்தைப் பார்க்கும் பொழுது, அவ்வடிகள் எல்லோரையும் வசப்படுத்தும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

முந்து நீகண்டுழி முகனமர்ந்தேத்திக்
கை தொழூ உப்பரவிக் காலுற வணங்கி
நெடும் பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கையேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வமால் வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றிவெல் போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற்றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறல் மள்ள.
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்தரேறே
வேல்கெழு தடக்கை சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண் பொருநெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே

அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக
நசையுநர்க்கார்த்து மிசை பேராள
அலந்தோர்க்களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றுடகலத்து
பரிசிலர்த்தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும் பெயர் இயவுள்,
சூர் மருங்கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருநகுரிசில் எனப்பல
யானறி அளவையினேத்தி * *

இவ்வடிகளில் முருகன் பல பெருமைகள் பேசப்படுதல் காண்போம். இது போலவே எல்லா நூல்களைக் காட்டிலும் இவ்வாற்றுப்படை நூல்களில் பாட்டுடைத் தலைவனின் பெருமைகள் பல படித்தாக நூல் முழுதும் பேசப் படுதல் இந்நூலின் ஒரு சிறப்பியல்பாக நாம் கண்டு மகிழத்தகும்.

இனி பரிசில் பெற்றான் ஒருவன் பரிசில் பெறச் சமைந்து நிற்பவனை ஆற்றுப்படுத்தும் முறை எங்ஙனம் காணப்படுகின்றது என்பது பார்ப்போம்.

இம்முருகாற்றுப் படையிலேயே
* * செவ்வேற்சேஎய்,
சேவடி படரும் செம்மலுள்ள மொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்
செலவு நீ நயந்தனையாயின் பலவுடன்,
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே *

என்ற பகுதி இவ்வாற்றுப் படுத்தும் அழகை விளக்குவதற்குச் சிறந்ததொரு உதாரணமாகும்.

உன் நல்ல மனத்தில் தோன்றிய இனிய விருப்பத்தை யாவது வீடு பேற்றையாவது தப்பாமல் இப்பொழுதே பெறுவாய் என்பது இதன் கருத்து.

---

## 8. பரணி

தமிழில் புறம் என்பதற்கு வீரம் என்று பொருள். வீரத்தை வகைப்படுத்திக் கூறும் நூல்கள் புறப்பொருள் நூல்கள் என்று கூறப்படும். இந்நூல்கள் சங்ககாலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழ் நாட்டில் தோன்றி இருக்கின்றன. அவற்றுள் பரணி என்பது சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றிய ஒரு வகைப் பிரபந்தம். போர்க்களத்தில் ஆயிரம் ஆண் யானைகளை வென்று மீண்ட ஒரு சிறந்த வீரனைத் தலைவனாக வைத்துப் பாடப்பெறுவது இந்நூல். இதனை,

ஆனை யாயிரம் அமரிடை வென்ற
மானவ னுக்கு வகுப்பது பரணி

என்னும் இலக்கண விளக்கச் சூத்திரத்தால் அறியலாம். இவ்விதம் சிறந்த வீரனொருவனைப் பாட்டுடைத் தலைவனாகப் பெற்று எழும் பரணி, கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, பாலைநிலம், காளிகோயில், முதலிய பல உறுப்புக்களைத் தன்னிடத்தில் பெற்று விளங்கும். தலைவனது குலம், குணம், வீரம், வெற்றி முதலிய மேம்பாடுகள் எல்லாம் புறத்திணை பலவும் தோன்ற நூலில் ஆங்காங்கே விளங்க வைக்கப்படும். இரு சீரடி, முச்சீரடி ஒழித்து ஒழிந்த மற்றைய அடியாக ஈரடிப்பஃறுழிசைகளால் இப்பரணி நூல் பாடப்பெறும். இவ்வாறு புலவர்களால் பாடப் பெறும் பரணியின் இலக்

கணத்தைக் கீழ்வரும் சூத்திரம் உணர்த்தும்,

* கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடி கணம் உரைத்தல் காளிக்கதி சொலல்
அடுபேய்க் கவள்சொலல் அதனால் தலைவன்
வண்புக ழுரைத்தல் எண்புறத் திணையுற
வட்டல் அடுகளம் வேட்டல் இவைமேல்
அளவடி முதலா அடியிரண் டாக
உளமகிழ் பரணி உரைக்கப் படுமே. *

என்பது சூத்திரம். இதனால் இலக்கணங்கள் பொருந்தப் பாடப் பெறுவதே பரணி நூல் என்பதை நாம் உணரவேண்டும்.

இனி, இந்நூல் பரணி எனப் பெயர் பெற்றதற்குக் காரணம் என்ன என்பதை அறியவேண்டுவது அவசியமல்லவா? இந்நூல் இப்பெயர் பெற்றதுபற்றிப் பலரும் பலவிதமாகக் காரணங்காட்டுவர். சிலர், தினைக்கொல்லையைக் காவல் செய்பவர் ஒரு பரண்மேல் இருந்து தினைப்பயிரை அழிக்கவரும் கிளி முதலான பறவைகளைக் கவண் முதலியவற்றால் எறிந்து துரத்துவது போல வீரர் யானைமீது வீற்றிருந்து பகைவரைத் துரத்தும் செய்தியை இது கூறுவதால் பரணி எனப் பெயர் பெற்றது என்பர். மற்றொரு சிலர், தினைப்புனங் காப்போர் பரண்மீது இருத்தல்போல வென்ற வேந்தனது சிறப்புக்களைப் பாடும் புலவன், அவ்வேந்தனது வேல், வாள் முதலான படைக்கலங்களால் ஆன பரண் மீது இருந்து பாடுவதால் இப் பெயர் பெற்றது என்பர். மற்றும் சிலர், "ஆபரணங்கள் வைக்கப்படும் செப்பு, தமிழில் பரணி என வழங்கப்படுவதுபோலப் பல கற்

பனேகளேயும் அணிகளேயும் சுவைகளேயும் தன்னகத்தே கொண்ட இந்நூல் பரணி எனப்பட்டது" என்பர். இவர்கள் கூறும் காரணங்கள் ஒருபுறம் இருக்கட்டும். இப்பெயர் காரணம்பற்றி ஆசிரியர் நச்சிஞர்க்கினியரது கருத்து யாது என்பதைக் கவனிப்போம். தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியலில் உள்ள ஒரு சூத்திர வுரையில் 'காடு கெழு செல்விக்குப் பரணி நாட் கூழும் துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி என்று அவர் குறித்துள்ளார். இதனே ஆதாரமாகக்கொண்டு பரணி நாளில் அந்நாளுக்குரிய காளிதேவியின் பொருட்டுப் பலியும் துணங்கைக் கூத்தும் கொடுத்துப் பழந்தமிழ் மக்கள் அவளே வழிபாடு செய்வது உண்டென்றும் அவ்வழிபாட்டில் தமது அரசனேத் தலைவனுக்கி அவனது இயல்புகளே இடை இடையே பெய்து புகழ்வர் என்றும் இத்தகைய பரணி நாள் வழிபாட்டைக் கூறுவதாகிய இந்நூல் அந்நாட் பெயரைப்பெற்றது என்றும் அறிஞர் பலரும் கருதுகின்றனர். இது நிற்க, இப்பரணி சம்பந்தமான வேறு சில செய்திகளே இங்கே குறிப்பிடுவோம். இந்நூல் அரசர் முதலானவர்கள்மீது மட்டும் பாடப்படுவதன்று, தெய்வங்கள்மீதும் தத்தம் ஆசிரியர்கள்மீதும் புலவர்களால் இது பாடவும் பெறும். இந்நூலானது வெற்றியடைந்த தலைவனேச் சார்ந்த பெயரால் வழங்கப்படாமல், தோல்வி அடைந்தோரைச் சார்ந்த பெயராலேயே வழங்கப்படும்.

தூது, மாலை, அந்தாதி முதலிய தமிழிலுள்ள பிரபந்தங்களேப் பாடுவதுபோல் பரணி பாடுவது புலவர்க்கு எளிய காரியமாய் இருந்தது என்று கருது

5

வதற்கு இல்லை. இதனைப் பரணி யொரு நாண் முழு துமே என்ற காளமேகப் புலவர் வாக்கு அறிவுறுத்தும். இத்தகைய பரணியை முதன் முதல் தமிழுலகத்திற்குத் தந்தவர் சயங்கொண்டார் என்னும் புலவர் பெருமான். முதற் குலோத்துங்கனது அவைப் புலவராக இருந்த அவர், குலோத்துங்கன் கலிங்கத்தை வென்ற செய்தியைக் கேட்டு மகிழ்ந்து, அவன்மீது கலிங்கத்துப்பரணி பாடினார். அதனால் 'பரணிக்கோர் சயங்கொண்டான்' என்று புலவர்களால் புகழவும் பெற்றார். அவரால் பாடப்பெற்ற கலிங்கத்துப்பரணியும் பிற்காலத்துத் தோன்றிய கவிச்சக்கரவர்த்தியான ஒட்டக்கூத்தரால் "தென்றமிழ் தெய்வப்பரணி" எனப் பாராட்டப்பட்டது. தாமே ஒரு பரணியை இயற்றிப் பரணி பாடுவதின் அருமையை அறிந்த அவ்வொட்டக் கூத்தரே கலிங்கத்துப் பரணியைத் "தெய்வப்பரணி" என்று போற்றுவாரானால் இப்பரணியின் பெருமையை நாம் என்னென்று சொல்லுவது.

இனி, இக் கலிங்கத்துப்பரணியின் எளிய இனிய நடை, கற்பனை நலம், பொருளாழம், சந்த இன்பம் இவை விளங்குமாறு சில உதாரணங்களை இங்கே காட்டுவோம்.

தூங்குகின்ற பெண்களை அவர்கள் இராக்காலத்தைக் கழித்த செய்தி தோன்ற அழைத்துக் கதவு திறக்குமாறு சில பெண்கள் எழுப்புவர். இப்பகுதி பரணியில் கடைதிறப்பு என்று வழங்கப்படும். கலிங்கத்துப் பரணியில் இப்பகுதி இன்பச்சுவை அமைந்ததாய் இருக்கிறது. அதனை அறிய, எழுப்பும் பெண்

கள் தூங்குகின்றவர்களை எவ்வாறு துயிலெழச் செய்கின்றனர் என்பதை இங்கே விளக்குவோம்.

இரவு நேரம். பள்ளியறையில் தத்தம் கணவன்மார்களுடன் பேசிக்கொண்டிருந்த சில பெண்களுக்குத் திடீரென்று கோபம் உண்டாகிறது. இயற்கைதானே பெண்களுக்கு இது. வெறுப்புக் குறிப்புடன் விசையாக எழுந்து விரைவாக நடக்கின்றனர். தம் மீது கோபம் ஏன், வெறுப்பு ஏன் என்று ஆடவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 'போனால் போகட்டும் அவர்கள்' என்று வெறுமனே இருக்கவும் ஆடவர்களுக்கு மனம் இடந்தரவில்லை. உட்கார்ந்தபடியே அப்பெண்களின் ஆடையை எட்டிப்பிடித்து இழுக்கின்றனர். தமது கணவன்மார்களின் இச்செய்கையால் நாணம் அடைந்தவர்களைப்போல 'ஆடையை விடுங்கள், விடுங்கள்' என்று கூச்சலிடுகின்றனர் அப்பெண்கள். அவர்கள் முகத்தில் வெட்கக்குறி. வார்த்தையில் வெடுவெடுப்பு. அவர்களது மனம் மட்டும் ஆடவர்களது இச்செய்கையால் இன்பக் கடலில் மூழ்கித் திளைக்கிறது. இதனால் அப்பெண்கள் 'எமது ஆடையைப் பிடித்து இன்னமும் கொஞ்சம் இழுங்களேன், இழுங்களேன்,' என்னும் பொருள் தோன்ற இருந்த இடம்விட்டு நகராமலே நிற்கின்றனர். இவ்வாறு ஊடலால் இன்பம் அனுபவித்த பெண்கள் பலர். இவர்களது இச்செய்கை தோன்ற எழுப்பும் பெண்கள் கூப்பிடுகிறார்கள் பாருங்கள்.

'விடுமி னெங்கள் துகில் விடுமி னென்று முனி
வெகுளி மென்குதலை துகிலினைப்
பிடிமின் என்றபொருள் விளையநின் றருள்செய்
பெடை நலீர் கடைகள் திறமினோ.

இத்தாழிசை பெண்களினது ஊடல் நிலையை எவ்வளவு பொருத்தமாக விளக்குகிறது. இவ்வாருன தாழிசைகளால் கலிங்கத்துப் பரணியின் கடைதிறப்பு அமையப்பெற்று இன்பச்சுவையின் உச்ச சிகரத்தை எட்டிப்பிடிக்கிறது. இனி, இக்கலிங்கத்துப்பரணியில் வீரர்களின் வீரமும், புலவரது கற்பனைத்திறமும் விளங்க நிற்கும் ஒரு பகுதியை இங்கு விளக்குவோம்.

போர்க்களத்தில் சோழன் படைவீரர்களும் கலிங்க மன்னன் படைவீரர்களும் உக்கிரமாகப் போர் செய்யத் தொடங்குகின்றனர். வீரர்கள் சினம் மிகுந்து ஒருவரையொருவர் தாக்குகின்றனர். இவ்வாறு தாக்கும் காலத்தில் அவர்கள் கொண்ட சினந்தான் என்ன. அவர்களது கண்களிலிருந்து சினத்தீ தோன்றுகிறது. அந்தத் தீ மின்னலைப்போல ஒளி வீசுகிறது. வீரர்கள் தம் கையிலே பிடித்து வில் நாண்களைத் தெறிக்கின்றனர். அவ்விற்கள் இடிபோல் முழக்கம் செய்கின்றன. பெரு மழை பெய்கிறது. என்ன மழை? அம்பு மழைதான் அது. மழை பெய்த பிறகு வெள்ளம் பெருகுமல்லவா? போர்க்களத்தின் வெளியிடங்களில் எல்லாம் இரத்த வெள்ளம் பெருகுகிறது. புதிதாகப் பெருகிவரும் வெள்ளத்தில் நுரைகள் மிதந்து வருவதுபோலப் போர்க்களத்தில் பெருகிய அந்த இரத்த வெள்ளத்தில் அங்கே இறந்து கிடக்கின்ற அரசர்களின் வெண்கொற்றக் குடைகள் நுரைகள் போல் மிதந்து வருகின்றன. இவ்வாறு பெருகும் இரத்த ஆற்றுக்குக் கரைகள் எவை? அங்கே வெட்டுண்டு கிடக்கும் யானைகளின் கால், உடல், துதிக்கை முதலான உறுப்புக்களெல்லாம் ஒன்றின் மேலொன்ருக அடுக்கப்பட்டுக் கரைபோல் இரு பக்கங்

களிலும் அமைந்து கிடக்கின்றன. கவியின் கற்பனையைக் கவனியுங்கள். வானம் மின்னி இடித்துப் பெருமழை பெய்ய, அதனால் ஆறுகளில் நுரைகளுடன் வெள்ளம் பெருகும் இயல்பைப் போர்வீரர்களின் நிகழ்ச்சியில் பொருந்த வைத்துக் கற்பித்திருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது. இனி இக்கருத்தை வெளியிடும் தாழிசைகளைப் பார்ப்போம்.

(1) விளைகனல் விழிகளின் முளைக்கவே
மினலொளி கனலிடை யெறிக்கவே
வளைசிலை யுருமென விடிக்கவே
வடிகணை நெடுமழை படைக்கவே

(2) குருதியின் நதிவெளி பரக்கவே
குடையினம் நுரையென மிதக்கவே
கரிதுணி படுமுடல் அடுக்கியே
கரையென இருபுடை கிடக்கவே.

என்பன.

பரணிகளில், பாலை நிலத்தின் இயல்பும் காளிகோயிலின் அமைப்பும், காளிதேவியை வழிபடுவோர் செயல்களும், அக்காளியின் பரிவாரங்களான பேய்களின் உருவத் தோற்றமும் பெரும்பசியுமாகிய இவைகளெல்லாம் கேட்போருக்கு அச்சமும் வியப்பும் உண்டாகுமாறு வருணிக்கப்படும். இவற்றுள் இங்கே காளியை வழிபடுவோர் எவ்வாறு அத்தேவியை மகிழ்விக்க முயல்கின்றனர் என்பதைக் கலிங்கத்துப் பரணியிலிருந்து அறியலாம். சில பக்தர்கள் காளிக்கு முன்னால் நின்றுகொண்டு தமது தலைகளை அடிக்கழுத்தோடு அறுக்கிறார்கள். அறுக்கப்பட்ட தம் தலைகளைக் காளியின் கையில் கொடுக்கிறார்கள். இவ்வாறு அவர்களால் கொடுக்கப்பட்ட அந்தத்

தலைகள் காளியின் கையில் இருந்தவண்ணமாகவே அத் தேவியைத் துதிக்கின்றன. தலையறுபட்ட முண்டங்கள் என்ன செய்கின்றன, பாருங்கள். துள்ளிக் குதிக்கின்றனவா? தரையில் சாய்கின்றனவா? இல்லை. பக்தி பரவசத்தால் அக்கவந்தங்கள் நின்றபடியே இரு கைகளையும் குவித்துக் கும்பிட்டு நிற்கின்றன. என்ன மன உறுதி. எவ்வளவு வீரமும் பக்தியும் உடையவர்களாக இவர்கள் இருக்கின்றனர், பாருங்கள். இனி இக் கருத்தை விளக்கும் தாழிசையைப் பார்க்கலாம்.

"அடிக் கழுத்தி னெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்த சிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்த சிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ

என்பது.

சில பேய்கள் பெரும் பசியால் வருந்தி உடல் மெலிந்தன. தம் பசி நீங்கும் வகையறியாத அவைகள் தம் பசியைச் சொல்லித் தமது தலைவியான காளியினிடம் முறையிடுகின்றன. இவ்வாறு பேய்களின் முறையீடாகவரும் தாழிசைகளில் ஒன்றின் கருத்தை இங்கே கூறுவோம்.

'சேரனை வென்று கப்பம் பெற்றவனும், தொண்டை நாட்டில் குளத்துளார் என்னும் வேளாளர்குடியில் பிறந்தவனும் பல்லவராயன் என்னும் பட்டம் பெற்றவனுமான நம்பிப் பிள்ளையைப் பாடாதவர் பசி நீங்காதவாறு போல நாங்களும் நீங்காப் பசியை உடையவர்களானோம்' என்று பேய்கள் முறையிடுகின்றன. இனி, இக்கருத்தைத் தழுவும் தாழிசையை நோக்குவோம்.

'வில்லவ னைத்திறைகொண்ட வேற்றன் காபதியைப்'
'பல்லவனைப்பாடாதார் பசிய னைய பசியினமே'

இத்தாழிசைத் தக்கயாகப் பரணியில் பேய் முறை பாட்டில் உள்ளது. பேய்களின் தணியாப் பசிக்கு நம்பிப் பிள்ளையைப் பாடாதவர் பசியை உவமையாகக் கூறுவதன்மூலம், கவிவாணர் ஒட்டக்கூத்தர் "வேளாளரை அடையாதவர் என்றும் பசித்திருப்பர்" என்னும் அரிய தத்துவத்தை விளக்குகின்றார். எவ்வளவு பொருத்தமான உவமை இது. இத்துடன் நம்பிப் பிள்ளையின் கொடைக்குணம் முதலான வரலாற்றுக் குறிப்பும் இதில் கூறப்படுவது சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகு மல்லவா?

இவ்வாறு தமிழிலுள்ள பரணிகள் இலக்கியச் சுவையை நுகர்வதற்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவன. ஆதலால் அவற்றைக் கற்றுப் பயன்பெறுவது தமிழ் மக்களது கடமையாகும்.

Printed at Sri Bharathi Press, Choolai, Madras.

# பரமசிவன் பள்ளிவாழ்க்கை




252-பக்கங்கள்     விலை ரூ. 3.

ஒற்றுமை ஆபீஸ்,

8, வியாசராவ் தெரு.
தியாகராய நகர், மதராஸ்-17.